விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 079 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 24 புதன்கிழமை (08.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

நாட்டை ஸ்திரப்படுத்திய பின்பே

## தேர்தல் நடத்தப்படும்

சபையில் ஜனாதிபதி



(கொழும்பு)
நாட்டு நிலைமையை ஸ்திரப்படுத்தியவுடன் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 15

# ஏப்ரல் 25 தேர்தல்

## தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானம்

(கொழும்பு) உள்ளூராட்சித் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.
தேர்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று கூடி ஆராய்ந்தபோதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

வடமராட்சியில் மாடுகளுக்கு

## பெரியம்மை நோய்

7 மாடுகள் உயிரிழப்பு

(கரணவாய்)
வடமராட்சி கிழக்கு அம்பன் கொட்டோடைப் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் மாடுகளுக்கான பெரியம்மை நோய் பரவியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
இதன் அடிப்படையில் 15 மாடுகளுக்கு பெரியம்மை நோய் இரு 15

இரு பெண் பிள்ளைகள் உட்பட

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சடலமாக மீட்பு

வவுனியாவில் அதிர்ச்சிச் சம்பவம்

(வவுனியா)
வவுனியாவில் இரு பெண் பிள்ளைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.
(15ஆம் பக்கம் பார்க்க)



மல்லாகத்தில்

## இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
மல்லாகத்தில் இளம் குடும்பஸ்தரொருவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இதில் அதே பகுதியைச் சேர்ந்த தேவ 15

இணுவில் கிழக்கில்

## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)
விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இச்சம்பவம் மருதனார்மடம் இணுவில் கிழக்குப் பகுதியில் நேற்று இடம் 15

அரசின் வரிக்கொள்கைக்கு எதிராக

## நாளை முதல் 15ஆம் திகதி வரை

தொடர் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)
அரசாங்கத்தின் வரிக்கொள்கைக்கு எதிராக நாளை 9ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை தொடர் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம் தீர்மானித்துள்ளது.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஒன்றிணைந்த சந்திப்பின் போது 15

## ஆட்டிறைச்சி எலும்பு குத்தியதில் பெண் மரணம்

மட்டுவில் தெற்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
ஆட்டிறைச்சி எலும்பு மார்புக் குருதிக் குழாயில் சிக்கிக் கொண்டதனால் குடும்பப் பெண் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.
இதில் சாவகச்சேரி, மட்டுவில் தெற் 15



உக்ரைன் – ரஷ்யா போரை நிறுத்தக்கோரி யாழில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

## ஜனநாயகத்தை பாதுகாக்க உடன் தேர்தலை நடத்துக

சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
தேர்தலை நடத்தாமல் தடுக்க இதுவரை சுமார் 22 விதமான சூட்டுச் சதிகளை அரசாங்கம் கையாண்டுள்ள என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.
அரசாங்கத்தின் மீதுமக்கள் கொண்டுள்ள அதிருப்தியை மூடி மறைக்க அரசாங்கம் தொடர்ந்தும் தேர்தலை ஒத்திவைக்க 15

அல்வாயில்

## வீடு புகுந்து பணம், நகை திருட்டு

(கரணவாய்)
அல்வாய்ப் பகுதியில் அதிகாலை வீடு ஒன்று திறந்திருந்ததை சாதகமாகப்பயன்படுத்தி அங்கிருந்த தங்க நகை, பெறுமதியான 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலைச்சுட்டெண் அதிகரிப்பு

(கொழும்பு) கொழும்புப் பங்குச் சந்தையின் விலைச் சுட்டெண் கலின்நேற்றுஉயர்வு ஏற்பட்டுள்ளது. அதன்படி நேற்றைய நாள் முடிவில், அனைத்து பங்கு விலை சுட்டெண் 198.02 அலகுகள் அதிகரித்து 9,642.94 அலகுகளாக பதிவாகியுள்ளது.

S&P SL20 குறியீடு 30.96 புள்ளிகளால் உயர்ந்து 2,869.14 அலகுகளாகவும் பதிவாகியுள்ளது.

3.43 பில்லியன் ரூபாய் பரிவர்த்தனை புரள்வு நேற்று பதிவாகியுள்ளது. (ம-7)

## துப்பாக்கிச் சூடு

(கொழும்பு) கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் நேற்று காலை துப்பாக்கிச் சூட்டுசம்பவம்ஒன்று இடம்பெற்றுள்ளது.

நீதிமன்றவழக்கு ஒன்றிற்காக நபர் ஒருவர் முச்சக்கர வண்டியில் சென்றுக் கொண்டிருந்த போது காரில் வந்த ஒருவர் முச்சக்கர வண்டியில் பயணித்த நபரை நோக்கி சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், முச்சக்கரவண்டியில் பயணித்தவர் மீது துப்பாக்கிச் சூடு படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

துப்பாக்கிச்சூடு நடத்தியது யார், என்ன காரணத்திற்காக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்பது தொடர்பில் இதுவரை தெரியவரவில்லை. (ம-7)


## நாகபூஷணி திருமண சேவை

பல்லாயிரக்கணக்கில் மணமக்கள் எம்மிடம் உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்து தரப்படும்.

264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

021 222 9306, 077 138 7596
071 999 9306

(C-6117)


## யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்

### வருடாந்த பொதுக் கூட்டம் - 2023

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 01.04.2023 சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் நடைபெறும். பழைய மாணவர்கள், சங்க உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 15.03.2023 திகதிக்கு முன்னதாக எழுத்து மூலம் சமர்ப்பிக்கவும் வதிவிட மாற்றம் உள்ளவர்கள் தயவோடு என்னுடன் தொடர்பு கொள்ளவும்.

'மத்தியின் மணிக்கொடி நித்திலம் நிலைக்கும்'

தொடர்புகளுக்கு
077 605 7836

செயலாளர்
பழைய மாணவர் சங்கம்
யாழ். மத்திய கல்லூரி

(14828)

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 31 - 05 - 1993

இறப்பு 08 - 03 - 2009

## அமரர் குமாரசாமி சங்கீர்த்தனன்



அன்பு மகனே சங்கீர்த்தனா
ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் நெஞ்சம்
பத்து மாதம் உனைச் சுமந்து
பண்போடும் பாசத்தோடும் உனை வளர்த்து
பாரினிலே நீ உயர்வாய் என்றிருக்க
கண்ணிமைக்கும் நொடிப் பொழுதில்
காலனவன் கரம் பற்றி
பாதிவழி சென்ற மாயமென்ன?
இற்று விடா இனிய வாழ்வை எமக்களித்து
அதில் நீ அற்று போன காரணம் தான் என்னவோ?
காலமெல்லாம் உன் நினைவோடு
களிப்பின்றி வாழ்கின்றோம் நாமிங்கே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல்:
குமாரசாமி குடும்பத்தினர்
கோம்பாவில், புதுக்குடியிருப்பு.

(14815)

# சேவை நலன் பாராட்டு

## 23 வருட கால ஆசிரிய சேவையாற்றி ஓய்வு பெறும் நாளில் மணி விழா நாயகியை வாழ்த்துகின்றோம்.



செல்வி **குழந்தை மகேஸ்வரி**
(பயிற்றப்பட்ட ஆசிரியர்)

**சேவைக்காலம்**
யா/ உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை
03.01.2000 - 26.01.2014
யா/உரும்பிராய் சைத்தமிழ் வித்தியாலயம்
27.01.2014 - 07.03.2023

ஆசிரியர் அவர்களின் மணிவிழா நாளில் அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஓய்வுக் காலம் சிறப்பாகவும் நலமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்க வாழ்கவென வாழ்த்துவோர் :**
ஆசிரிய நலன்புரிச்சங்கம், யா/உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், உரும்பிராய்.

(14823)


## லொத்தர் சீட்டு விற்பனையாளர்கள் தேவை

நகரப் பகுதிகளில் லொத்தர் ரிக்கற் விற்பனை (நடந்து) செய்வதற்கும், துவிச்சக்கரவண்டியில் விற்பனை செய்வதற்கும் ஆட்கள் தேவை. மற்றும் மாற்றுத் திறனாளிகட்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

விரும்புபவர்கள் தொடர்புகொள்ளவும். 077 603 1723


கடந்த 03.03.2023 அன்று விசேட சீட்டிழுப்பு மெகாபவர் 3 ஒரு லட்சங்களும் ஒரு மவுன்டைன் சைக்கிளும் யாழ். நகரில் வெல்லப்பட்டது.

NLB - DLB ரிக்கற்றுக்களை அதிகம் வாங்குங்கள் அதிகம் வெல்லுங்கள்

யாழ் முகவர் கனகலிங்கம் திலகவதி
இல.04. K.K.S வீதி யாழ்ப்பாணம்.

(14819)


# நல்லூரானுடன் ஐக்கியமானார் மாணிக்கம் ஐயா!



பூவுலகில் 08.02.1955 ... 06.03.2023

நல்லூரானுக்கு உரிய நேரத்திற்கு சுறுசுறுப்புடனும் திரிகரணசுத்தியோடும் சளைக்காது ஓடியோடிப் பணிபுரிந்த

**உத்தம வேதியர் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் மகாதேவக் குருக்கள் ஐயா**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்லூரான் அடியவர்கள் சார்பாக
தங்க.முகுந்தன் | 077 727 9238 | மூளாய்.

(C-6120)

# கண்ணீர் அஞ்சலி

(ஈவினை கிழக்கு புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட)

## அமரர் பாலசிங்கம் பரமேஸ்வரி



மண்ணில் 05.03.1963
விண்ணில் 06.03.2023

எமது சங்கத்தின் அங்கத்தவர் *திரு.வீரன் பாலசிங்கம்* அவர்களின் மனைவியான அமரர் பா.பரமேஸ்வரி 06.03.2023ஆம் திகதி அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் குடும்பத்தினருக்கும், உறவுகளுக்கும் எமது சங்கத்தின் அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் : அங்கத்தவர்கள், நிர்வாக சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ. சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவில் இலங்கை குறித்த மீளாய்வுக் கூட்டம் இன்று

(ஜெனிவா)

**ஐ.நாவின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயம் தொடர்பான மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவில் இலங்கை தொடர்பான மீளாய்வுக்கூட்டம் இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளது.**



18 சுயாதீன நிபுணர்களை உள்ளடக்கிய மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் 137 ஆவது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரிமாதம் 27 ஆம் திகதி ஆரம்பமானதுடன், அக்கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இலங்கையின் 6 ஆவது காலாந்தர அறிக்கை கடந்த 2019 பெப்ரவரி 22 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட நிலையிலேயே, 6 ஆவது மீளாய்வு இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

இம்முறை 6 ஆவது மீளாய்வு செயன்முறையானது இலங்கையின் வேண்டுகோளுக்கு அமைவாக ஜெனிவாவிலுள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலகவின் தலைமையில் கலப்பு வடிவத்தில் முன்னெடுக்கப்படவுள்ளது. (நி)

## இலங்கையின் தேங்காய்ப் பாலுக்கு வெளிநாட்டில் அதிக கிராக்கி

(கொழும்பு)

இலங்கையின் தேங்காய்ப் பாலுக்கு வெளிநாட்டு சந்தையில் அதிக தேவை காணப்படுவதாக தென்னை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் மாத்திரம் 40,000 மெற்றிக் தொன் தேங்காய்ப்பால் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக அதன் பிரதிப் பணிப்பாளர் சரத் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை சம்பாதித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகளில் இலங்கையின் தேங்காய்ப் பாலுக்கு அதிக தேவை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## அமெரிக்க திறைசேரி செயலருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கலந்துரையாடல்



(கொழும்பு)

அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜேனட் எல். யெலன் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் நேற்று முன்தினம் தொலைபேசி மூலமான கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

இலங்கையின் பொருளாதார சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் செல்வதற்கும் வலுவான மற்றும் நீடித்த மீட்சியை அடைவதற்குமான திட்டங்களுக்கு அமெரிக்காவின் ஆதரவை அவர் வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்திடம் கோரப்பட்டுள்ள கடனைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்கு தேவையான உதவிகளை மேலும் வழங்குவதாக அமெரிக்க திறைசேரி செயலாளர் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் கடன்களை கையாள்வதில் தற்போதைய அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையைப் பாராட்டிய அமெரிக்க திறைசேரி செயலாளர், இலங்கையின் அர்ப்பணிப்புகளையும் வரவேற்றுள்ளார். (நி)

## சாதாரணதர பரீட்சை தாமதமடையும் சாத்தியம்

(கொழும்பு)

2022 கல்வி பொதுத் தராதர சாதாரணதர பரீட்சையை பிற்போடுவதற்கான சாத்தியமுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உயர்தர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தாமதமடைவதே இதற்கு காரணமென தெரிவிக்கப்படுகின்றது.

சாதாரணதர பரீட்சைக்கான திகதியை எதிர்வரும் இரு வாரங்களுக்குள் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.(நி)

## மயந்த பதவி விலகி விட்டார் சபையில் அறிவித்தார் சபாநாயகர்

(கொழும்பு)

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவர் பதவியில் இருந்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க விலகினார். அவரது பதவி விலகல் கடிதத்தை பெற்றுக் கொண்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்துக்கு அறிவித்தார்.

ஆளும் கட்சியினால் பரிந்துரைக்கப்பட்ட மயந்த திஸாநாயக்க, அரசாங்க நிதிபற்றியக் குழுவின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

அதே நேரத்தில் எதிர்க்கட்சி கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை அந்தப் பதவிக்கு ஏற்கனவே முன்மொழிந்திருந்தது.

இதனையடுத்து, எழுந்த சர்ச்சைகள் மற்றும் விமர்சனங்களையடுத்து, குறித்த பதவியிலிருந்து விலகுவதாக மயந்த திஸாநாயக்க அறிவித்தார். (நி)

## இலங்கையைச் சேர்ந்த கடத்தல்காரர்கள் மடகஸ்கார் விமான நிலையத்தில் கைது

(அண்டநாணரிவோ)

இலங்கையின் போதைப் பொருள் கடத்தல் புள்ளிகளான ஹரக் கட்டா என அழைக்கப்படும் நதுன் சிந்தக விக்ரமரத்ன, குடு சாலிந்து என அழைக்கப்படும் சலிந்து மல்ஷிக ஆகியோர் மடகஸ்கார் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து உட்பட 8 பேர், மடகஸ்காரின் தலைநகர் அண்டனானாரிவோவின் இவாட்டோ சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கடந்த முதலாம் திகதி கைது செய்யப்பட்டனர் என எல்.எக்ஸ்பிரஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

ஹரக் கட்டாவின் மனைவி எனக் கூறப்படும் மடகாஸ்கர் பெண்ணொருவரும் அப்பெண்ணின் தந்தையும் கைதானவர்களில் அடங்குவர் அந்த இணையத்தளம் தெரிவித்துள்ளது.

ஹரக் கட்டா உட்பட ஐவர், கடந்த பெப்ரவரி 12 ஆம் திகதி மடகஸ்காரின் சுற்றுலா தீவான நோசிபேவில் வி பிரத்தியேக ஜெட் விமானம் ஒன்றின் மூலம் வந்திறங்கினர்.

பின்னர், கடந்த முதலாம் திகதி மடகஸ்காரிலிருந்து வெளியேறுவதற்காக அன்டனானரிவோ விமான நிலையத்துக்கு வந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என குறித்த இணையத்தளச் செய்தி வெளியிட்டுள்ளது. (நி)


## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம்
## அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/பூம்புகார் அ.த.க.பாடசாலை - வகை II
2. யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் - வகை II
3. யா/ கொக்குவில் மேற்கு சீ.சீ.த.க.பாடசாலை - வகை III
4. யா/ புத்தூர் மடிஹேபஞ்சசீஹ வித்தியாலயம் - வகை III
5. யா/ இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை - வகை III

தகைமைகள்:

- வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் **தரம் III** அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- வகை III பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- விண்ணப்பிக்க விரும்புவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், பிரதி, உதவி, அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

குறிப்பு:


- விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப்படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை தங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக 2023.03.22 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"யாழ்ப்பாணம் வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2023(I)"** எனக் குறிப்பிடவும்.

**திரு.மு.இராதாகிருஷ்ணன்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(சி-614)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்துக்கு எதிரான இறுதி ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் ஆறுதல் வெற்றி!



இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில், பங்களாதேஷ் அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இந்தப் போட்டியில், பங்களாதேஷ் அணி வெற்றி பெற்றிருந்தாலும் ஏற்கனவே முதலிரண்டு போட்டிகளிலும் இங்கிலாந்து அணி வெற்றிபெற்று தொடரை வென்றுள்ளது.

சட்டாகிரோம் மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 48.5 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 246 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சகிப் அல் ஹசன் 75 ஓட்டங்களையும் முஷ்டபிசுர் ரஹ்மான் 70 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இங்கிலாந்துக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், ஜொப்ரா ஆர்செர் 3 விக்கெட்டுகளையும் சேம் கர்ரன் மற்றும் அடில் ராஷித் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கிறிஸ் வோக்ஸ் மற்றும் ரெஹான் அஹமட் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 247 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணி, 43.1 ஓவர்கள் நிறைவில் 196 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால், பங்களாதேஷ் அணி 50 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஜேம்ஸ் வின்ஸ் 38 ஓட்டங்களையும் பிலிப் சோல்ட் 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

பங்களாதேஷ் அணியின் பந்துவீச்சில், சகிப் அல் ஹசன் 4 விக்கெட்டுகளையும் தைஜுல் இஸ்லாம் மற்றும் எபொட் ஹொசைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் முஷ்டபிசுர் ரஹ்மான் மற்றும் மெயிடி ஹசன் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 75 ஓட்டங்களையும் 4 விக்கெட்டுகளையும் வீழ்த்திய சகிப் அல்ஹசன் தெரிவு செய்யப்பட்டார். (4)

# அறுவைச் சிகிச்சை காரணமாக நெய்மர் திடீர் விலகல்

பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மர் கணுக்கால் அறுவை சிகிச்சைக்காக போட்டியில் இருந்து விலகுவதாக PSG அறிவித்துள்ளது.

பிரான்சின் பாரிஸ் செயின்ட்-ஜேர்மன் அணியில் விளையாடி வரும் நெய்மருக்கு, கடந்த மாதம் 20ஆம் திகதி காலில் உபாதை ஏற்பட்டது.

இதனால் பாரிஸ் செயின்ட்-ஜேர்மன் மருத்துவ ஊழியர்கள், பெரிய ஆபத்தைத் தவிர்க்க தசைநார் பழுது பார்க்கும் அறுவை சிகிச்சைக்கு நெய்மரை பரிந்துரைத்தனர்.

இந்த நிலையில் நெய்மர் அறுவை சிகிச்சை காரணமாக இந்த போட்டியை தவறவிடுவார் என்று PSG அறிவித்துள்ளது. மேலும், ஆலோசிக்கப்பட்ட அனைத்து நிபுணர்களும் இந்த அவசியத்தை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் கிளப் கூறியுள்ளது.

லீக் 1 போட்டியில் 13 கோல்கள் மற்றும் 11 அஸ்சிஸ்ட் செய்துள்ள நெய்மர் எஞ்சிய போட்டிகளை தவறவிடுவது ரசிகர்களுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது.

இதற்கு முன்பு 2017ஆம் ஆண்டில் பார்சிலோனாவில் சேர்ந்ததில் இருந்து கால், இடுப்பு, விலா எலும்பு மற்றும் கணுக்கால் காயங்கள் காரணமாக நெய்மர் பல போட்டிகளை தவறவிட்டார். (4)



# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2780

### துஷானி



உடைந்து போன
நிலையிலும்
அடுத்த அடியை
உன்னால்
எடுத்து வைக்க
முடிந்தால்
எவராலும்
உன்னை தோற்கடிக்க
முடியாது.

### நிந்துயா

புருஷனுக்கு இருக்கிற பசி அப்பவே போயிடும்...
மனைவிக்கிட்ட இந்த வார்த்தை கேட்கும் போது.



சாப்பிட்டு முடிங்க உங்கக்கிட்ட கொஞ்சம் பேசனும்...

### சித்தார்த்



காயங்களோடு
சிரிப்பது
அவ்வளவு எளிதல்ல
அப்படி சிரிக்க
பழகிக்கொண்டால்
எந்த காயமும்
பெரிதல்ல...

### நிதர்சன்

வாழ்க்கையை பொறுமையா பக்குவமா
கைய பிடிச்சு அழைச்சிட்டு போவோம்னு
நாம நினைச்சா....

அது என்னடான்னா
அது இஷ்டத்துக்கு
நம்மள பிடிச்சு
தரதரன்னு
எங்கெங்கோ
இழுத்துட்டு போகுது.



### சாருஜன்



ஒருவரின் கருத்துக்கு
நீங்கள் மறு கருத்து
பேசாத வரை...
அவருக்கு நீங்கள்
நண்பன் தான்..

### யுவதேஷ்

ஒவ்வொரு அரிசியிலும் நம்ம பேரை
கடவுள் எழுதலாம்.. ஆனால்...



அது பிரியாணியா?பழைய சோறான்னு
முடிவு பண்றது பொண்டாட்டி தான்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ந்தும் தாமதமாகும் முட்டை இறக்குமதி

## வர்த்தக அமைச்சு

(கொழும்பு)
இந்தியாவில் இருந்து முட்டைகளை ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைவதில் மேலும் தாமதம் ஏற்படும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

தலைநகர் புதுடில்லியிலுள்ள கால்நடைப் பிரிவு ஊடாக கிடைக்க வேண்டிய அறிக்கை மேலும் தாமதமடைவதால் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உரிய அனுமதி கிடைத்தவுடன் 2 மில்லியன் முட்டைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படவுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் பண்டிகை காலம் முடிவடையும் வரை பல கட்டங்களாக முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றை 40 ரூபாய் அல்லது அதற்கு குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

# நலன்புரிக் கொடுப்பனவுகளை 75 வீதம் குறைக்கத் திட்டம்

(கொழும்பு)
சமுர்த்தி உள்ளிட்ட ஏனைய நலன்புரிக் கொடுப்பனவுகளை நூற்றுக்கு 75 வீதம் குறைப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளது என அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே அந்த சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் பி.ஏ.பி பஸ்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

சமூக நலன்புரிக் கொடுப்பனவுகள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்து அரசாங்கம் கொடுப்பனவினை குறைப்பதற்கு தயாராகி வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## மாவனெல்லவில்

# இரு பேருந்துகள் மோதி விபத்து ஒருவர் பலி -22 பேர் காயம்

(கொழும்பு)
தனியார் பேருந்து ஒன்றும் இலங்கை போக்குவரத்து சபை பேருந்தொன்றும் மாவனெல்ல கனேகொடவில் மோதியதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 22 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நீர்கொழும்பில் இருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றும் கண்டியில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)



# இரண்டு மாதங்களில் 330 மில்லியன் ரூபாய்

(கொழும்பு)
இந்த வருடத்தின் கடந்த இரண்டு மாதங்களில் சுற்றுலாத்துறை மூலம் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஈட்டப்பட்டுள்ளன.

கடந்த மாதம் மட்டும் 170 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வருமானமாக ஈட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக வருடத்தின் முதல் இரு மாதங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைத் தாண்டியுள்ளதாக சுற்றுலாத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# பணியாளர்கள் பற்றாக்குறையால் நாளாந்தம் 20 ரயில் சேவைகள் ரத்து

(கொழும்பு)
பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக நாளாந்தம் 20 இற்கும் மேற்பட்ட ரயில் பயணங்கள் ரத்து செய்யப்படுவதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

எஞ்சின் சாரதிகள் பலர் ஓய்வு பெற்றதையடுத்து நீண்ட தூர ரயில்களுக்கான சாரதிகள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால்.பல இரவு அஞ்சல் ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுகிறது.

தற்போதுள்ள என்ஜின் சாரதிகள் நீண்ட தூர சேவைகளில் இடுபடத் தயங்குவதால், நீண்ட தூர ரயில் சேவைகளின் செயற்பாடுகள் சிக்கலாக மாறியுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

# ரூபாய் மதிப்பு மேலும் அதிகரிப்பு

(கொழும்பு)
அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் மதிப்பு மேலும் அதிகரித்துள்ளது.

அதன்படி நேற்றைய தினம் டொலருக்கு நிகரான ரூபாவின் கொள்விலை 315 ரூபாவாக பதிவாகியுள்ளது.

மேலும் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 335 ரூபாவாக பதிவாகியுள்ளது. (நி)

# இராசிபலன்

08.03.2023
மாசி 24, புதன்கிழமை
பிரதமை முன்னிரவு 8.17 மணிவரை

உத்தரம் பின்னிரவு - 4.45 மணிவரை
சுபநேரம் -4.54-6.24 மணிவரை
இராகுகாலம்-12.24-1.54 மணிவரை

சந்திராஷ்டமம் -சதயம்
சர்வதேச மகளிர் தினம்,
திருவள்ளுவர் குருபூசை

வளவன்

**மேஷம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், இலாப நோக்கோடு பழகியவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** கூட்டு முயற்சிகள் முன்னேற்றம் தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், உறவினர்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** வரவை விட விரயங்கள் மேலோங்கும் நாள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், புகழ் மிக்கவர்கள் உங்கள் பொருளாதார நிலை உயர வழிவகுப்பர்.

**மகரம்** மனதில் இனம்புரியாத கற்பனைகள் தோன்றும், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள்.

**ரிஷபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், கனவுகள் நனவாக இஷ்ட செய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**சிம்மம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தூர தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படும் வாய்ப்புண்டு, நல்லவர் என நினைத்த ஒருவரே உங்களுக்கு விரோதமாகச் செயற்படலாம்.

**மிதுனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி** பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தேக நலனில் அக்கறை கூடும்.

**தனுசு** குடும்பத்தில் ஒற்றுமை கூடும், பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.


**மீனம்** உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறலாம்

உன்னுடைய சொற்களைக் கவனி அவைகள் உன்னுடைய செய்கைகள் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.தீவக கடற்கரையில் வெளிநாட்டு பறவைகள் வருகை





(அராலி)

காலநிலை மாற்றம் காரணமாக புலம்பெயர்ந்து இருக்கும் தெற்கு வான் கூவர் தீவுகளில் உள்ள பறவையினங்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தீவக கடற்கரையிலும் அதிகமாக வருகின்றன.

அந்த வகையில் யாழ். அராலி மற்றும் மண்கும்பான், ஊர்காவற்துறையில் உள்ள கடற்கரைகளிலும் இப் பறவையினம் வருவதை காண முடிகின்றது.

குறிப்பாக இந்த பறவையினம் குடும்பமான குழுக்களாக பங்குனி மாதங்களில் வருவதை காணமுடிகின்றது. இது கண்களுக்கு காட்சி அளிக்கும் வகை ஒரு அற்புதமாக காணப்படுகின்றது. (4-6-104)

# அச்சுவேலி வாள்வெட்டுடன் தொடர்புடைய இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.அச்சுவேலி நகரில் இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் இருவர் அச்சுவேலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரு குழுக்களுக்கிடையில் நீண்டகாலமாக நிலவி வந்த முரண்பாடு காரணமாக அச்சுவேலி - மகிழடி வைரவர் கோவிலடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இளைஞன் ஒருவன் மீது வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்த தாக்குதலில் பாரதி வீதி பத்தமேனியை சேர்ந்த 27 வயதான இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டிருந்த அச்சுவேலி பொலிஸார், குட்டியப்புலம் பகுதியை சேர்ந்த 23 மற்றும் 24 வயதுடைய இரு இளைஞர்களை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரிடமும் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், மேலும் சிலரை கைது செய்வதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-6-104)

# அம்புலன்ஸ் மோதியதில் இரு மாடுகள் உயிரிழப்பு



(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பருத்தித் துறை வீதியில் எருவன் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு மாடுகளுடன் மோதி வரணி பிரதேச வைத் தியசாலைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் வண்டி விபத்துக் குள்ளாகியுள்ளது.


இரவு 10 மணியளவில் வரணியில் இருந்து கொடிகாமம் நோக்கி வந்த போதே குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

இதில் நோயாளர்காவு வண்டியுடன் மோதிய இரண்டு மாடுகள் இறந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்தில் அம்புலன்ஸ் வண்டி கடுமையாக சேதமடைந்துள்ள போதிலும் அதில் பயணித்தவர்களுக்கு எந்தவிதமான பாதிப்புக்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# வைரவர் சூலத்தை பிடித்தவாறு உயிரிழந்த குரங்கு



(சாவகச்சேரி)

கொடிகாமம்-கச்சாய் தெற்குப் பகுதியில் உள்ள பாதாள வைரவர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த சூலத்தை கட்டிப் பிடித்தபடி குரங்கு ஒன்று உயிரிழந்துள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை ஆலயத்தில் நின்ற புளிய மரத்தின் கீழே வைக்கப்பட்டிருந்த சூலத்தை பிடித்தவாறு குரங்கு ஒன்று உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது.

இருப்பினும் குரங்கினுடைய உடலில் காயங்கள் எவையும் ஏற்பட்டிருக்கவில்லை எனவும் சூலத்தை பிடித்தவாறு உயிரிழக்க காரணம் என்னவென தெரியவில்லை எனவும் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர். (4-6-30)

# கணவனின் கத்திக்குத்துக்கு இலக்கான மனைவி படுகாயம்

## கெற்பேலியில் சம்பவம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை கணவனின் கத்திக்குத்திற்கு இலக்காகி பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

கணவன் - மனைவிக்கு இடையே இடம்பெற்ற வாய்த் தர்க்கம் முற்றிய நிலையில் கத்திக்குத்து இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் 38 வயதான பெண் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.(4-6-30)

# வயோதிபத் தம்பதியை மிரட்டி பணம், நகை கொள்ளை

## அல்வாயில் சம்பவம்

(கரணவாய்)

வயோதிபத் தம்பதியினரை அச்சுறுத்தி மூன்றரைப் பவுண் தங்க நகையும் 36000 ரூபா ரொக்க பணமும் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அல்வாய் வடக்கு பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இரவு வயோதிபத் தம்பதியினர் நாய்க்கு உணவு வைப்பதற்காக கதவை திறந்து வெளியே சென்றதை சாதகமாக பயன்படுத்தி முகமூடி அணிந்த நிலையில் வீட்டுக்குள் புகுந்த மூன்று கொள்ளையர்கள் வயோதிபத் தம்பதியினரை அச்சுறுத்தி விட்டு இரண்டரைப் பவுண் தங்கச் சங்கிலி, ஒரு பவுண் தோடு மற்றும் 36,000 ரூபாய் ரொக்கப்பணம் என்பவற்றை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (4-6-60)

# கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

கோப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோண்டாவில் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்பினை வைத்திருந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதே பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு 5 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார். கோப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கோப்பாய் பொலிஸாரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)



அரசாங்கத்தின் உணவு பாதுகாப்பு மற்றும் கிராமிய புத்தெழுச்சி நிகழ்ச்சி திட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை வரணி சிட்டிவேரம் அம்மன் ஆலயத்துக்கு முன்பாக உள்ளூர் உற்பத்தி பொருட்கள் விற்பனை இடம் பெற்றது. (படம்:-மகாலிங்கம்)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

(குருநகர்)

குருநகர் சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் பாடசாலை அதிபர் எஸ்.ஆர்.எம். பெரீன் தலைமையில் இடம்பெறும். (4-6-106)



மேல்மருவத்தூர் பங்காரு அம்மாவின் பிறந்த தினத்தை முன்னிட்டு ஊரெழு கணேச வித்தியாசாலையின் நலன் விரும்பிகளான திருக்குமார்-கலைச்செல்வி குடும்பத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 32 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கடந்த 3 ஆம் திகதி அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் மறுசீரமைப்பிற்கான ஆதரவை எழுத்து மூலம் வழங்கியது சீனா

## 2.9 பில்லியன் டொலர் கடனுதவி உறுதியானது

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவியை பெறுவதில் உள்ள தடையை நீக்கி, இலங்கையின் கடன் மறுசீரமைப்பிற்கு ஆதரவளிப்பதாக சீனா உறுதியளித்துள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய இருதரப்பு கடன் வழங்குநராக உள்ள சீனா, எக்ஸிம் வங்கி ஊடாக கடன் மறுசீரமைப்பிற்கான எழுத்து மூலமான ஆதரவை வழங்கியுள்ளதாக ப்ளூம் பேர்க் தெரிவித்துள்ளது.

2.9 பில்லியன் டொலர் பெறுமதியான கடனுதவியை பெற்றுக்கொள்வதற்கான இந்த உத்தரவாத கடிதம் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளை பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னதாக சர்வதேச நாணய நிதியத்தால் அங்கீகரிக்கப்பட்ட கடன் தொகை இம்மாதத்திற்குள் கிடைக்கும் என ஜனாதிபதி உள்ளிட்ட இலங்கை அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## உள்ளூராட்சி மன்றங்களை சட்டப்படியே கையாள வேண்டும்

### பிரதமர் தினேஷ்



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களை சட்டத்தின் பிரகாரமே கையாள முடியும் என பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு திறைசேரி செயலாளரை அழைத்து கலந்துரையாடலை நடத்தவுள்ளதாகவும் அதன் பின்னரே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்க முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் இம்மாதம் 19 ஆம் திகதி நிறைவடைந்ததன் பின்னர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து எதிர்க்கட்சி எழுப்பிய கேள்விக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி)

## ஜனாதிபதி உரை மீது 3 நாட்கள் விவாதம் வேண்டும் - சஜித்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கி ரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்து தொடர்பாக மூன்று நாட்கள் விவாதம் நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி கேட்டுக் கொண்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். இது தொடர்பான விவாதத்தை அடுத்த அமர்வில் நடத்துமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி)






## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

**15.03.2023 தொடக்கம் 31.12.2023 வரையான காலப் பகுதிக்கு கோழி இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடை மற்றும் பழைய முள்ளிப்பற்று உப அலுவலகம் என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக்கேள்வி அறிவித்தல் -2023**

ஏலக்கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 08.03.2023 தொடக்கம் 14.03.2023 வரை

ஏலக்கேள்வி ஏற்கும் கடைசித்திகதி :- 14.03.2023 காலை 10.00 மணிவரை

ஏலம் நடைபெறும் திகதி :- 14.03.2023

ஏலம் நடைபெறும் நேரம் :- காலை 11.00 மணி

ஏலம் நடைபெறும் இடம் :- தலைமை அலுவலகம், பச்சிலைப் பள்ளி பிரதேச சபை.

| இல. | கடை விபரம் | 2023 ஆம் ஆண்டுக்கான ஆகக்குறைந்த ஏலத்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) |
|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | |
| 01 | கோழியிறைச்சிக்கடை | 386,800.00 | 16,000.00 |
| 02 | கருவாட்டுக்கடை | 8,235.50 | 5,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | |
| 03 | கோழி இறைச்சிக்கடை | 44,400.00 | 5000.00 |
| 04 | பழைய முள்ளிப்பற்று உப அலுவலகம் | 58,006.50 | 5000.00 |

**நிபந்தனைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02 ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தலைமை அலுவலகத்தில் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணத்தினை 14.03.2023 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ள வேண்டும்.
03.ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
04.கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் ஏலத்தொகையின் 1/3 பகுதி பாதுகாப்பு வைப்பு பணத்தினைச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை மேற்கொள்ள வேண்டும். பாதுகாப்பு வைப்பு பணத்தை உடனடியாகச் செலுத்தத் தவறும் பட்சத்தில் அடுத்த கேள்விதாரருக்கு குத்தகைக்கு வழங்கப்படும்.
05.இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகையினை மாதாந்தம் 05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டமாக அறவிடப்படும்.
06.சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
07.ஏலக்கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
08 மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-0118)

சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.

08.03.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்படும் அபாயம்

# பெரும் உயிர் ஆபத்தில் லட்சக்கணக்கானோர்

(அங்காரா)

**துருக்கியில் மேலும் நிலநடுக்கம் ஏற்படலாம் என அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள மக்களில் 20 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் இடம்பெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**



அண்மையில் துருக்கி மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட பாரிய நில நடுக்கத்தில் இருந்து தப்பியவர்கள் தொடர்ந்தும் அச்ச நிலையில் தமது வீடுகளுக்கு வெளியே வாழ்ந்து வருகின்றனர்.

பாரிய நில நடுக்கத்தினை தொடர்ந்து அந்த இரு நாடுகளிலும் தொடர்ச்சியாக சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் இடம்பெற்ற வண்ணம் உள்ளது.

இதேவேளை கடந்த மாதம் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் துருக்கியில் மட்டும் 45,968 பேரும் சிரியாவில் 6,000 இற்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளதாக அரசாங்கங்கள் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெரும்பாலான வீடுகள் சேதமடைந்துள்ள நிலையில், 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் முற்றாக அழிந்து போயுள்ளன.

இந்தநிலையில்,நில நிலக்கம் ஏற்படலாம் என உறுதிப்படுத்தப்பட்ட இடங்களில் 15 இலட்சம் மக்கள் தொடர்ந்தும் வசித்து வருவதாக ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் தெரிவித்துள்ளது. (நி)

# பெண்கள் பல்கலைக்கழகம் செல்ல தடை விதித்த தலிபான்கள்

## எதிர்த்து மாணவிகள் ஆர்ப்பாட்டம்

(காபூல்)

ஆப்கானில் பெண்கள் பல்கலைக்கழகங்களிற்கு செல்வதற்கு தலிபான்கள் தடை விதித்துள்ளமைக்கு எதிராக காபூல் பல்கலைக்கழகத்திற்கு வெளியே மாணவிகள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

மாணவர்கள் பல்கலைக்கழகங்களிற்கு திரும்பியுள்ள நிலையிலேயே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானில் பல மாகாணங்களில் மாணவர்களிற்கான பல்கலைக்கழக வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன என தலிபான் அறிவித்துள்ளது. அனைத்து மாணவர்களும் ஆசிரியர்களும் பாதுகாப்பான சூழலில் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என தலிபான் அறிவித்துள்ளது.



ஆண் மாணவர்கள் காணப்படும் படங்களும் வெளியாகியுள்ளன.

தனியார் பல்கலைக்கழகமொன்றில் மாணவிகளின் படம் காணப்படும் பதாகையொன்றை ஸ்பிரே பெயின்ற் பயன்படுத்தி மறைத்துள்ளதை காணமுடிகின்றது.

பல்கலைக்கழக கற்றல் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பமானது குறித்து மகிழ்ச்சி. ஆனால் எங்கள் சகோதரிகள் கற்றலில் ஈடுபடமுடியாதது கவலை அளிக்கின்றது என நசீர் என்பவர் ஆப்கானின் செய்திக்கு தெரிவித்துள்ளார்.

மாணவிகள் இஸ்லாமிய ஆடைவிதிமுறைகளை பயன்படுத்தாதன் காரணமாகவும் இஸ்லாமிய விதிமுறைகளை பின்பற்றாததன் காரணமாகவும் பல்கலைக்கழங்களில் மாணவிகள் கற்பதை தடை செய்துள்ளதாக தலிபான் தெரிவித்துள்ளது.

மாணவிகள் ஆண் துணையின்றி நடமாடுவது போன்றவற்றை தலிபான் காரணமாக காட்டியுள்ளது. (நி)

# மெக்ஸிகோவில் கைவிடப்பட்ட ட்ரக் வண்டியிலிருந்து 343 புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்பு



(மெக்ஸிகோ)

மெக்ஸிகோவின் - வெராக் ரூஸ் மாநிலத்தில் கைவிடப்பட்ட ட்ரக் வண்டியொன்றில் இருந்து 343 புகலிடக் கோரிக்கையாளர்கள் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்களில் 103 ஆதரவற்ற சிறுவர்களும் அடங்குவதாக மெக்ஸிகோ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

ட்ரக் வண்டியிலிருந்து மீட்கப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் குவாத்தமாலா, ஹொண்டுராஸ், எல் சல்வடோர் மற்றும் ஈக்வடோர் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களாவர்.

மீட்கப்பட்ட அனைவரும் பாதுகாப்பாக இருப்பதாகவும் அவர்கள் தங்கியிருந்த ட்ரக் வண்டியில் மின் விசிறி மற்றும் காற்றோட்ட வசதிகள் காணப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலத்தில் கைவிடப்பட்டிருந்த ட்ரக் வண்டியொன்றிலிருந்து 53 புலம்பெயர்ந்தோரின் சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பேருந்து- ஆட்டோ மோதல் 13 பேர் உடல் கருகி உயிரிழப்பு

(லிமா)

பெரு நாட்டில் பேருந்து-ஆட்டோ நேருக்கு நேர் மோதிய கோர விபத்தில் 13 பேர் உடல் கருகி பலியாகினர்.

தென் அமெரிக்க நாடான பெருவின் பியூரா பகுதியில் இருந்து அதன் தலைநகரான லிமாவுக்கு ஒரு பேருந்து சென்றது. இந்த பேருந்தில் சுமார் 50 பேர் பயணம் செய்தனர். அன்காஷ் என்ற இடத்துக்கு அருகே பேருந்து சென்று கொண்டிருந்தபோது எதிரே வேகமாக வந்த ஆட்டோவுடன் நேருக்கு நேர் மோதியது.

இதில் பேருந்தும், ஆட்டோவும் தீப்பிடித்து எரிந்தன. இந்த கோர விபத்தில் 13 பேர் சம்பவ இடத்திலேயே உடல் கருகி உயிரிழந்தனர். இது குறித்து தகவலறிந்த மீட்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். அவர்கள் படுகாயம் அடைந்த 6 பேரையும் மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து தொடர்பாக பொலிஸார் வழக்கு பதிவு செய்து பேருந்து சாரதியை கைது செய்தனர். (நி)

# சார்லஸ் முடிசூட்டு விழா ஹரி தம்பதிக்கு அழைப்பு



(லண்டன்)

பிரித்தானிய மன்னர் சார்லஸ் முடிசூட்டு விழாவில் பங்கேற்க இளவரசர் ஹரி தம்பதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியவில் நீண்ட காலம் ராணியாக இருந்த ராணி 2 ஆம் எலிசபெத் கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் 8 ஆம் திகதி தனது 96 வயதில் மரணமடைந்தார். இதனை தொடர்ந்து 2 நாட்களுக்கு பின் அவரது மகன் மூன்றாம் சார்லஸ் பிரித்தானியாவின் புதிய மன்னராக அரியணை ஏறினார்.

இந்த சூழலில் மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழா. மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என பக்கிங்ஹாம் அரண்மனை உறுதிப்படுத்தியது.மன்னர் மூன்றாம் சார்லஸ் முடிசூட்டு விழாவில் பங்கேற்க இளவரசர் ஹரி மற்றும் அவரது மனைவியான மேகன் மார்கலே ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எனினும். இந்த பதவியேற்பு விழாவில் கலந்து கொள்ள இளவரசர் ஹரி தம்பதி பிரித்தானியா செல்வார்களா? என்பது பற்றிய தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை. (நி)

# பிலிப்பைன்ஸில் பூகம்பம்

(மணிலா)

பிலிப்பைன்ஸின் தென் பகுதியில், நேற்று 6.0 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

சான் மரியானோ நகரிலிருந்து 4 கிலோமீற்றர் தொலைவில் 38.6 கிலோமீற்றர் ஆழத்தில் இப்பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க பூகோளவியல் ஆய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு
## "பெண்களின் ஆரோக்கியத்தில் பாரம்பரிய உணவும் மூலிகையும்"



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

சில கிராமிய அமைப்புகள்/ இல்லங்களில் தமது சரிவிகித உணவை எடுக்கும் பாங்கு அற்புதமானது. சோறு, பருப்பு அல்லது கருவாடு அல்லது மீன் ஒரு துண்டு. பலாக்காய் அல்லது ஈரப்பலாக்காய் அல்லது மரவள்ளிக்கிழங்கு அவித்தலை ஒரு கரண்டி அத்துடன் ஏதாவது ஒரு இலைச்சுண்டல் ஒரு கரண்டி முதலியன. ஒரு கோப்பையில் இலை முக்கூட்டு உணவாக அமைந்து இருப்பதை அவதானிக்கலாம்.

பெண்களே இவ் முறைகளை இல்லங்களில் வடிவமைத்துக் கொள்ளல் ஆரோக்கியமானதாகும்.

குடும்ப ஆரோக்கியத்துக்கும் அதன் வழி சமூக, நாட்டின் ஆரோக்கிய்த்துக்கும் மூலாதாரமாகப் பெண்களே விளங்குகின்றனர். ஆகவே பெண்களின் ஆரோக்கியம் நன்னிலையில் இருப்பது அவசியமாகும்.

பெண்களின் ஆரோக்கியத்தை அவர்களின்பருவங்களின் அடிப்படையில் நோக்கலாம்.

பருவமடைந்த பெண்கள், திருமணமான பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பிரசவித்த பெண்கள், பாலூட்டும் தாய்மார்,மாதவிடாய் நிற்கும் போது பெண்களின் ஆரோக்கியம்,வயோதிபப் பெண்களின் உணவு.

பெண் பருவமடைந்த காலத்திலிருந்து அவளின் உணவு விடயங்களில் விசேட கவனம் செலுத்த வேண்டும். மாதாந்தம் மாதவிடாயின் போது ஏற்படும் இரத்த இழப்புக்களினால் உண்டாகும் உடல் பலவீனத்தை நிவர்த்தி செய்யவும் கர்ப்பாசய உறுப்புக்கள் வலுப்பெறவும் திருமணத்தின் பின் இலகுவாக தாய்மைப் பேறடையவும் உதவும் முகமாக உணவுப் பழக்கவழக்கங்கள் அமைய வேண்டும். அந்த வகையில் உளுத்தங்களி, பிட்டு என்பன முக்கியம் இடம்பெறுகின்றன. இவை கர்ப்பாசயத்தை வலுவடைய செய்யும்.

மேலும் சாதாரண பிட்டிலும் பார்க்க விடத்தல், பொருத்துமான் கொடி, ஆவரசு போன்றவற்றின் இலைகளை சிவப்பு பச்சரிசியுடன் சேர்த்து இடித்து தயாரிக்கும் பிட்டானது மாதவிடாயின் போது (அபரிமிதமான பெரும்பாட்டை)/ அதிக இரத்தம் வெளியேறுவதைத் தடுக்கும். நல்லெண்ணெயை தினமும் 30-60 ml வரை பருகக் கொடுக்கலாம். கத்தரிப்பிஞ்சு முதலியவற்றை நல்லெண்ணெய்விட்டு வதக்கி உண்ணக் கொடுக்கலாம்.

நல்லெண்ணெய், தேகத்துக்கு பலத்தை கொடுப்பதுடன் கண்ணொளியையும் (உயிர்ச்சத்து ஏ உண்டு) கொடுக்கும். மேலும் பல நோய்கள் ஏற்படாமல் பாதுகாக்கும் தன்மை கொண்டது. இதில் காணப்படும் முக்கிய கொழுப்பமிலமான Linoleic acid, கருப்பை முதலிய உறுப்புக்களின் வளர்ச்சிக்கு உதவும். பருப்பு, கீரை, தயிர், வெண்ணெய், நெய், பழவகை, பசுப்பால், உளுந்து சேர்ந்த உணவுகளையும் அதிகளவில் கொடுப்பதன் மூலம் பருவமடைந்த பெண்களின் ஆரோக்கியம் நன்னிலையில் பேணப்படும்.

திருமணமான பெண்களை பராமரிப்பதிலும் விசேட கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் திருமணத்தின் அடுத்த கட்டம் தாய்மையடைதலாகும். எனவே கருத்தரிக்கவும் கருவைத்தாங்கவும் ஏற்ற விகிதத்தில் கர்ப்பாசய உறுப்புக்களே பலம் அடையச் செய்யத்தக்க உணவுகளை வழங்க வேண்டும். அதிகளவில் உளுத்தம்மா, உளுந்து சேர்ந்த உணவுகளை வழங்க வேண்டும்.கற்பாசய உறுப்புக்களுக்கும் இடுப்பெலும்புகளுக்கும் உறுதியையும் பலத்தையும் கொடுக்கும். எள்ளுப்பாகு, பசுப்பால், சம்பா அரிசிச் சோறு, பேரீச்சம்பழம், பாதாம் பருப்பு, முந்திரிகைப்பழம், செவ்வாழைப்பழம் இவற்றையும் அதிகளவில் உணவில் சேர்க்க வேண்டும்.

ஆறாம் மாதத்தின் பின்னர் வாழைப்பழம், முந்திரிகைப்பழம், வெள்ளரிப்பழம், விளாம்பழம், பப்பாசிப்பழம் கொடுக்கலாம். மேலும் கர்ப்பிணிப்பெண்களின்மனநிலையை நன்னிலையில் பேண வளைகாப்பு நடத்தப்படுகிறது. இதன்போது வேப்பிலைக்காப்பு, வசம்புக் காப்பு அணிவிக்கப்படும். இது கருவிலிருக்கும் குழந்தையை நோய்த்தாக்காமலிருக்கவும் தாய்க்கு நோய் வராமல் இருக்கவும் உதவும்.

தாய்ப்பாலுட்டும் காலங்களில் வள்ளல் கீரை, வெள்ளைப்பூடு, பனங்கட்டி, சீவ உணவுகளில் பால் சுறா, இளம் பலாக்காய் போன்றவற்றை அதிகளவில் தினசரி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். பெண்களின் எவ் பருவ நிலைகளிலும் பசுப்பாலை அத்தியாவசியமாக சேர்த்துக்கொள்ளல் வேண்டும்.

வயோதிபர் காலங்களில் புழுக்கொடியல் மா, முளைவிட்ட சிறுதானியங்களாலான சத்துமா போன்றவற்றை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும் கூழ், கஞ்சி போன்றன போசணை நிறைந்ததும் இலகுவில் சமிபாடு அடையக் கூடியதுமாகும். பிஞ்சு மரக்கறிகளான அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு போன்றவற்றை அதிகம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். என்புகளைப் பலப்படுத்த பிரண்டைத்துவயல் ,பசுப்பால், நெத்தலிபோன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.பெண்களின் பங்களிப்பு இல்லாமல் வீட்டில் நல்ல வளர்ச்சியோ மாற்றமோ உண்டாகாது.

பெண்கள் கர்ப்பமடைந்த நிலையில் அவர்கள் தனக்காக மட்டுமின்றி தனது வயிற்றில் வளரும் சிசிவிற்காகவும் உண்ண வேண்டியிருப்பதால் அக்கறையுடன் கவனிக்கப்பட வேண்டும். ஏற்கனவே கூறியது போல கர்ப்பிணிப் பெண்களுக்கும் உளுந்து, நல்லெண்ணெய் சேர்ந்த உணவுகள் அதிகம் கொடுக்கப்பட வேண்டும். கர்ப்பிணிப் பெண்களுக்கான முன் மாதங்களில் ஏற்படும் வாந்திக்கு துருஞ்சி மணப்பாகு (நாரத்தை) கொடுக்கலாம். 5 ஆம் மாதத்தின் பின்பு பாலுடன் சிறிதளவு குங்குமப்பூ கலந்து கொடுக்கலாம்.

இது இரத்தத்தை சுத்திகரித்து பிரசவ வேதனையை குறைத்து பிரசவத்தை இலகுவாக்கவும் பிரசவித்த பின்பு கருப்பையில் ஏற்படும் இரத்த தோஷங்களை நீக்கவும் உதவும். ஆறாம் மாதத்தின் பின்னர் எள்ளு, பனங்கட்டி, உளுத்தம்மா என்பவற்றை சேர்த்திடித்து எள்ளுப்பாகு வழங்கலாம்.

எள்ளு, பனங்கட்டி என்பவற்றில் இரும்புச்சத்து, கல்சியம் என்பன அதிகம் காணப்படும். இவை தாய்க்கும் சேய்க்கும் போசாக்குணவாக அமைவதுடன் தாய்க்கும் சிறந்த மலமிளக்கியாகவும் செயற்படும். காலை, மாலை இரு நேரமும் வற்றக்காய்ச்சிய பாலை அருந்தக் கொடுக்கலாம். பசுப்பால் நிறையுணவாக இருப்பதுடன் வாத பித்த கபம் என்பவற்றை சம நிலையில் வைப்பதால் நோய்கள் அணுகாது. உண்ட உணவு செமிக்கும், உடல் வலுவும் வனப்பும் பெறும்.

முருங்கையிலை, பொன்னாங்காணி, வல்லாரை, முல்லை, முசுட்டை, வள்ளல் கீரை, தவசி முருங்கை போன்ற கீரைவகைகளை தாராளமாகச் சேர்க்கலாம். இவற்றில் உயிர்ச்சத்துக்கள், இரும்புச் சத்து, கல்சியம் என்பன காணப்படுகிறது.

உளுத்தம்மா, பயற்றம்மா, சிவத்தப்பச்சரிசிமா, கடலைமா போன்றவற்றில் செய்த பலகாரங்களை வழங்கலாம். இவற்றில் வேண்டியளவு புரதச்சத்து இருப்பதுடன் சிவத்தப்பச்சரிசி, முளைவிட்ட பயறு போன்றவற்றில் போலிக்கமிலம் உள்ளது. இவை குருதிக்கலங்கள் முதிர்ச்சியடைவதற்கும் குறைபாடுள்ள குழந்தைகள் பிறப்பதை தவிர்ப்பதற்கும் உதவும்.

# தானும் நிலைமாறி வெங்காயச் செய்கையில் தடுமாற வைக்கும் காலநிலை



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எங்களூர் விவசாயத்தின் மகிமை பற்றி பல காலம் நாம் பேசியபின்னர் தற்போது எங்களூர் விவசாயமும் விவசாயிகளும் எதிர்கொள்ளும் இடர்களைப் பற்றியும்பேசியே ஆக வேண்டும் என்னும் நிலைமை வந்துவிட்டது.

குறிப்பாக பணப் பயிராக விளைவிக்கப்படும் வெங்காயம் மூன்று மாதமளவில் அறுவடைக்குத் தயாராகியிருக்கும் நிலையில் வெங்காயப் பயிரில் நோய்த் தாக்கம் ஏற்படுவதனால் அவர்களால் சிறந்த வெங்காயத்தை அறுவடை செய்ய முடியாமல் வெங்காயச் செய்கையில் அள்ளியிறைத்த முதலீட்டுக்கு குறைந்தளவு இலாபத்தையாவது பெற முடியாமல் அல்லல் படும் செய்தியறிந்து மனம் அல்லல்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் இடைக்காடு, அச்சுவேலிப் பகுதியில் பரந்து பட்டளவில் வெங்காயச் செய்கையில் ஈடுபடும் பல விவசாயப் பெருமக்களுக்கு இம்முறை நோய்த்தொற்று அதிகளவில் ஏற்பட்டதால் விளைச்சலில் விழுக்காடு ஏற்பட்டிருக்கின்றது.

அப்பகுதியைச் சேர்ந்த முற்போக்கான இளம் விவசாயி சிவக்குமார் கஜீபன் தங்களுடைய வெங்காயச் செய்கையில் காலம் மாறி, நேரம் மாறி பெய்த மழையினால் இம்முறை பயிர் உற்பத்தியில் ஏற்பட்ட தாக்கம் பற்றி வெளிக்கொணர்ந் திருக்கின்றார். வெங்காயச் செய்கையில் மட்டுமல்ல அவர்கள் உற்பத்தி செய்த மிளகாய், தக்காளி பயிர்களிலும் அசாதாரண மாற்றத்தை அவதானித்திருக்கின்றனர். பயிர்களில் பாதிப்பு வெளிப்படை



யாகவே தெரிவதாகவும் தமக்குக் கிடைக்கின்ற பங்கசு நாசினிகளை தெளித்து இவற்றை கட்டுப்படுத்த முயற்சிப்பதாகவும் கடிதம் மூலம் அறிவித்திருக்கின்றார்.

பொருளாதார நெருக்கடிக்குள் நம் நாடு சிக்கி மீண்டும் மீளெழுவதற்கு பல வழிகளில் முயற்சிக்கும் போது உணவுற்பத்தியில் விழுக்காடு ஏற்படுவதனை தவிர்க்க முயற்சிக்க வேண்டும்.

வெளிநாடு என்று வெளிக்கிளம்பாது உள்ளூரிலேயே விவசாய உற்பத்தியில் தமது கவனம் அனைத்தையும் முழுமையாக இறக்கி உற்பத்தியில் பங்களிக்கும் இளம் விவசாயிகளுக்கு ஊன்றுகோலாக, உறுதுணையாக இன்னும் அவர்களுக்கு தேவையான அறிவுசார் விடயங்களை வழங்கி மன தளவில் சோர்ந்து விடாது ஊக்கமளிக்க வேண்டியது அவசியமானதாகும். அதனை அவர்களும் முழுமையாக எதிர்பார்த்திருக்கின்றார்கள்.

தற்சமயம் பங்கசு மற்றும் கிருமிநாசினிகளை சந்தைகளில் வாங்குவது கடினமாக இருப்பதாகவும் அவற்றை வாங்கினாலும் இரண்டு மூன்று மடங்கு அதீத விலையில் வாங்கி விசிற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றார்கள். பாதிப்புக்குட்பட்ட வெங்காயப் பயிரின் மாதிரிகளை கிளிநொச்சியிலுள்ள விவசாய உயிரியல் துறைக்கு அனுப்பியிருக்கின்றார்கள்.

இந்த நிலைமை அச்சுவேலிப் பகுதி வெங்காயம் மற்றும் ஏனைய பயிர்ச்

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

செய்கைக்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல.

இருப்பினும் வெங்காயச் செய்கையையே வாழ்வாதாரமாக உற்பத்தி செய்யும் விவசாயப் பெருமக்களுக்கு இது பேரிழப்பு. நம் நாடு பொருளாதார வீழ்ச்சிக்குள் சிக்கியுள்ள இக்காலம் இன்னும் விவசாயப் பெருமக்களுக்கு வலி சேர்க்கும் காலமாகும். தமது முழு வருமானத்தையும் வெங்காயச் செய்கையினுள்ளே ஈடுபடுத்தி உற்பத்தி செய்த விவசாயப் பெருமக்களுக்கு அதிலிருந்து பெறக் கூடிய வருமானம் இம்முறை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இது அவர்களது வாழ்வாதாரத்தில் குடும்ப வருமானத்தில் முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

விலைகள் அதிகளவில் எகிறி வருமானமும் மட்டுப்படுத்தப்பட்டதால் அவர்களின் உடல், உளநலம் பாதிப்புற காரணமாயிற்று. ஒருபுறம் வெங்காயப் பயிரில் ஏற்பட்ட நோயின் தீவிரம் அதிகரித்ததால் அவற்றை அறுவடையில் செய்வதில் பிரச்சினைகளை மேலும் எதிர்நோக்கியிருக்கின்றனர்.

வெங்காயம் பழுதடையக் கூடிய பொருளாக இருப்பதனால் நோய்த் தொற்று ஏற்படாத வெங்காயத்தை அறுவடை செய்யும் போது அதனை நீண்டகாலம் பயன்பாட்டிற்கு சேமிக்க முடியும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி புனரமைக்கப்படாததால் பொதுமக்கள் பாதிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு இரட்டை வாய்க்கால் சந்தியில் இருந்து சாலை வரைக்குமான பிரதான வீதி புனரமைக்கப்படாமையினால் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அன்றாடம் போக்குவரத்தில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு பரந்தன் ஏ-35 வீதியின் இரட்டை வாய்க்கால் சந்தியிலிருந்து வலைஞர்மடம் அம்பலவன் பொக்கணை புதுமாத்தளன் ஆகிய கிராமங்களூடாக சாலை வரை செல்லும் சுமார் 13 கிலோமீற்றர் நீளமான வீதி இன்றுவரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

இதனால் குறித்த வீதியை பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

இறுதி யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் அதிகளவான மக்கள் தொகையினைக் கொண்ட பகுதியாகக் காணப்பட்ட இப்பகுதி கடந்த யுத்தத்தின் போது அதிக பாதிப்புக்களையும் உயிரிழப்புக்களையும் கொண்ட பகுதியாகக் காணப்பட்டது.

இப்பகுதியில் யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வையடுத்து ஐந்து ஆண்டுகள் நிறைவுபெற்றுள்ள போதும் இன்றுவரை குறித்த வீதி புனரமைக்கப்படாத நிலையில் போக்குவரத்து வசதிகள் இன்றியும் காணப்படுகின்றது.

எனவே குறித்த வீதியை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-315)

# சட்டவிரோத மது உற்பத்தியை கட்டுப்படுத்த போதிய ஆளனி வளங்கள் இல்லை

## கிளிநொச்சி மதுவரி திணைக்களம்


(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனைகளை கட்டுப்படுத்த போதிய ஆளனி வளங்களின்மையே காரணம் என மதுவரித் திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து காணப்படும் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி விற்பனைகளால் பல்வேறு பாதிப்புக்கள் ஏற்படுவதுடன் கூடுதலான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான மதுபான உற்பத்திகள் தொடர்பில் பொலிஸாருக்கோ அல்லது மதுவரித் திணைக்கள அதிகாரிகளுக்கோ தகவல்களை வழங்கும் போதும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என்றும் பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கிளிநொச்சி முட்கொம்பன் பகுதியில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தி விற்பனைகள் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட மதுவரித்திணைக்களத்திற்கு பலதடவைகள் தெரியப்படுத்தியும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லையென பிரதேச பெண்கள் அமைப்புக்கள் இந்த விடயம் தொடர்பாக மேற்படி திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தங்களிடம் போதிய ஆளணிகள் இன்மை காரணமாகவே தமது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். குறித்த அலுவலகத்தில் தற்போது மதுவரி காவலர் பதவியில் உள்ள இரண்டு பேர் மட்டுமே கடமையில் உள்ளதாகவும் குறித்த அலுவலகத்துக்கு தேவையான மதுவரி பரிசோதகர், மதுவரி அலுவலக பொறுப்பதிகாரி மற்றும் பெண் உத்தியோகத்தர்கள் ஆகிய பதவிகளுக்கான உத்தியோகத்தர்கள் இல்லாத நிலைகாணப்படுகின்றது. இவ்வாறு குற்றச்செயல் நடைபெறும் இடத்துக்கு மதுவரி பரிசோதகர் ஒருவருடன் ஏனைய அதிகாரிகள் சென்று கைது நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்தில் மதுவரி பரிசோதகர் இல்லாத காரணத்தினால் குறித்த நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-315)

# சட்டவிரோத மணல் அகழ்வு வயல் நிலங்களில் அதிகரிப்பு



(தருமபுரம்)

புளியம்பொக்கணை பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை முடிந்து ஒரு வாரங்களே ஆகிய நிலையில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம் பெறுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

வயல் நிலங்களில் பல அடி ஆழத்திற்கு தோண்டப்பட்ட நிலையில் இரவு வேளைகளில் டிப்பர் மற்றும் உழவு இயந்திரங்களின் ஊடாக வயல் உரிமையாளரின் அனுமதி இன்றி மணல் அகழ்வு நடைபெறுகின்றன.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து விவசாய நிலங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (4-6-316)

## சர்வதேச மகளிர் தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் வருடா வருடம் நடத்தப்படும் சர்வதேச மகளிர் தினம் இவ் வருடம் மகளிர் உரிமையை மதிப்போம் எனும் தொனிப் பொருளில் நாளை காலை 9.30 மணிக்கு யாழ்.புனித மடுத்தீனார் குருமட முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விழிப்புணர்வு நடைபவனியானது கரித்தாஸ் கியூடெக் யாழ்ப்பாணம் நிறுவன முன்றலில் இருந்து பிரதான வீதி யாழ்.புனித மடுத்தீனார் குருமட முன்றலில் நிறைவடையும். அதனைத் தொடர்ந்து சுயதொழில் விழிப்புணர்வு கண்காட்சியும் நடைபெறவுள்ளது. (4)



யாழ்ப்பாணம் பழைய மாணவச்சிப்பாய் அமைப்பினால், யாழ். வலயக்கல்வி பணிப்பாளரின் அனுமதியுடன், யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு Change To The Life எனும் பயிற்சிப்பாசறை அண்மையில் இடம்பெற்றது. கலந்து கொண்ட மாணவர்கள் அனைவருக்கும் மாணவர் தேசிய படையணியின் 20 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி ரத்னவீரவால் சான்றிதழ் வழங்கிவைக்கப்பட்டது.

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்க விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தில் காந்தி சேவா சங்கத் தலைவர் சோ.க.தம்பிப் பிள்ளை தலைமையில் இடம் பெறவுள்ளது. (4)



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள திம்பிலி ஆரம்ப பாடசாலையில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 73 மாணவர்களுக்கான ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் புதிய வாழ்வு நிறுவனத்தினால் கடந்த 5 ஆம் திகதி வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (படம்: சதீஸ்)

# சட்டவிரோத மணல் அகழ்வு இருவர் பொலிஸாரால் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுண்டிக்குளம், கல்மடு ஆகிய பகுதிகளில் சட்டவிரோத முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது மணல் அகழ்வுக்கு பயன்படுத்திய இரண்டு டிப்பர் வாகனமும் ஒரு உழவு இயந்திரமும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்டவர்களை நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (4-6-316)

# கஞ்சாவுடன் மூவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிச் சோதனையின் போது உடைமையில் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மூவரையும் நேற்றையதினம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (4-6-316)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய திருவிழா ஏற்பாடுகள் பூர்த்தி

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருத்தல யாத்திரைக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச செயலாளர் த.அகிலன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருத்தல யாத்திரை இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் நேற்று தொடர்பு கொண்டு கேட்டபோது இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் கடந்த வாரம் முதல் துறைசார் அதிகாரிகள் களவிஜயம் மேற்கொண்டு அதற்கான வேலைகளை முன்னெடுத்துள்ளனர். ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களுக்கான போக்குவரத்துக்கள் யாவும் வலைப்பாட்டில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ளது. அதேபோல மருத்துவ சேவைகள், குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளும் உரியவாறு மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-6-315)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 123

# சிந்தித்து செயற்படுங்கள்

கணவன், மனைவிக்கென தனித்தனியாக அறைகளுடன் கூடிய எல்லா வசதிகளும் நிறைந்த, முதியோர் காப்பகத்தில் தனித்தனி அறைக்கே உணவு வரும் வகையில் ஏற்பாடு செய்து அதற்காக மாதம் 6000 ரூபாய் என்று 12000 ரூபாவும் மகன் பணம் கட்டி அல்லவா இந்த முதியோர் இல்லத்தில் நம்மை சேர்த்து விட்டு இருக்கிறான்.

இவ்வாறு இருக்க மனைவி சியாமளா ஏன் அழுது கொண்டே இருக்கிறாள் என்று புரியாமல், சதாசிவம் அவளையே வெறுமையாய் பார்த்துக் கொண்டிருந்தார்.

பரிமாறிய உணவைக் கூட சாப்பிடாமல் உனக்கு என்ன குறை வந்து விட்டது என்று அவளைப் பார்த்து கேட்டார்.

மகன் ரகு. 5 அறைகள் உள்ள பெரிய பங்களா கட்டி கிரஹப்பிரவேசம் பண்ணும் போது நாமும் தானே கூட இருந்தோம்.

அவ்வளவு பெரிய வீட்டிலே எங்களுக்கு தங்க இடம் கிடையாது என்கிற மாதிரி இங்கே கொண்டு வந்து விட்டுட்டு போய்ட்டானே? இவன் இந்த நிலைமைக்கு வர எவ்வளவு நாம கஷ்டப்பட்டு இருப்போம்.

சதாசிவம் நிதானமாக, ரகுவை நல்ல நிலைமைக்கு கொண்டு வர வேண்டும் என நாம் பாடுபட்டோம்.என் சம்பாத்தியமே நிறைய வந்தும் நான் சொல்லச் சொல்ல கேட்காமல் நீயும் வேலைக்குப் போய் சம்பாதிச்சே மகனுக்காக செலவழிச்சே.

அப்படி செய்தும் அவன் நம்மை அநாதை இல்லத்திலயா விட்டிருக்கானா என்ன? நல்ல வசதியான முதி யோர் இல்லத்துலே தானே விட்டுருக்கான், சும்மா அழுதுண்டு இருக்காம சாப்பிடு என்றார் சதாசிவம்.

மறுநாள் சாயங்காலம் மகன் ரகு வந்து அப்பாவிடம் ஒரு போன் நம்பரைக் கொடுத்தான்.

இது கார் ஓட்டுநரின் நம்பர் நீங்கள் வெளியே போக வேண்டும் என்றால் இந்த நம்பருக்கு போன் பண்ணி கார்ல சௌகரியமாய்ப் போய்ட்டு வாங்க பணம் ஒன்று கொடுக்க வேண்டாம் அதெல்லாம் நான் பாத்துக்கிறேன் என்றான்.

மகனைப் பார்த்து நீ சரியான படிச்ச முட்டாள்டா. பணமாடா பெரிசு. வயசான காலத்துலே வந்து பக்கத்துலே உட்கார்ந்து "அம்மா சாப்பிட்டியான்னு" கேட்கிற வார்த்தை எனக்கு கிடைக்கவில்லை எனச் சொல்ல ரகு இதே கதை தானே எனக்கும் நடந்தது.பணத்தாலே எல்லா சௌகரியமும் தந்தீங்கள். ஆனால் ஆசையாய் ஒருநாள் ஒரு வாய் சாதம் ஊட்டி, தலைவாரி, உடுப்பு போட்டு விட்டிருப்பீங்களா? ஆயா முகம் தான் கண்ணுக்குத் தெரியுது என அழுதவாறு சொன்னான்.

என் குழந்தைகளையும் பாசத்திற்காக ஏங்க விடமாட்டேன். அதனால்தான் நன்றாக படிச்சும் வேலைக்குப் போகாத யமுனாவை கல்யாணம் பண்ணிக்கிட்டேன்.

ரகு, சரி கிளம்புங்கோ யமுனா எல்லாருக்கும் சமைச்சு வச்சுக்கிட்டு காத்திருப்பாள். கூடவே உங்கள் பேரக் குழந்தைகளும் தான் என்றான். போகிற வழியில் யமுனாவோட அப்பா அம்மாவையும் அழைச்சுக்கிட்டு போகலாம் என்றான். வீட்டிற்குப் போனதும் கீழே இருக்கிற இரண்டு அறைகளில் ஒன்று உங்களுக்கு மற்றொன்று யமுனாவோட அப்பா அம்மாவுக்கு. மாடியிலே எங்களுக்கு. இரண்டாவது குழந்தைகளுடையது. மூன்றாவது விருந்தினர்கள் வந்தால் தங்க என்றான். சதாசிவத்திற்கு காஞ்சி பெரியவாள் சொன்ன ஸ்தீரி தர்மம் நினைவுக்கு வந்தது.

குடும்பத்துக்கு வேண்டிய பொருளை கொண்டு வருவது புருசனுடைய கடமை. கொண்டு வரும் பொருளை வைத்து குழந்தைகளையும் புருசனையும் பராமரிப்பது ஸ்தீரிகளின் தர்மம்.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# கட்டுப்பாட்டு விலைக்கு முட்டை விற்பனை செய்யப்படுவதில்லை

## நுகர்வோர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் கட்டுப்பாட்டு விலைக்கு முட்டை விற்பனை செய்யப்படாததால் அதிக விலை கொடுத்து முட்டைகளை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக நுகர்வோர்கள் தெரிவிக்கின்றனர்.

வெள்ளை முட்டை ஒன்று 44 ரூபாவுக்கும் சிவப்பு முட்டை 46 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்ட நிலையில், முட்டை விற்பனையாளர்கள் 54 ரூபாய் முதல் 65 ரூபாய் வரை பல்வேறு விலைகளில் விற்பனை செய்து வருகின்றனர். அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்யப்படுவதால் நாட்டு மக்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளதாக நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (நி)

# பூச்சி கொல்லி மருந்துகள், அழகுசாதனப் பொருட்கள்; கடத்தப்படவிருந்த நிலையில் பறிமுதல்

(சென்னை)

கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைத்திருந்த பல இலட்சம் ரூபாய் மதிப்பிலான பூச்சி கொல்லி மருந்துகள், அழகு சாதனப் பொருட்களை மெரைன் பொலிஸார் நேற்று செவ்வாய்க்கிழமை பறிமுதல் செய்தனர்.

சந்தேகத்திற்கிடமான சரக்கு வாகனத்தை நிறுத்தி சோதனை செய்த போது அதில் இருந்த 20 மூட்டைகளை பிரித்து பார்த்தனர். 450 கிலோ பூச்சிகொல்லி மருந்துகள், 125 கிலோ அழகு சாதனப் பொருட்கள், கைக்கடிகாரம், பேன்ஸி பொருட்கள் இருந்தன.

அவற்றை எடுத்துச் செல்ல எவ்வித ஆவணங்களும் இல்லை. இது குறித்து வாகனத்தில் இருந்த 2 பேரிடம் நடத்திய விசாரணையில் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தனர். இருவரையும் மரைன் காவல் நிலையம் அழைத்து வந்தனர்.

பின்னர் அவர்களிடம் நடத்திய விசாரணையில், சரக்கு வாகனத்தில் கொண்டு வந்த பொருட்களை கடல் வழியாக இலங்கைக்கு கடத்துவதற்காக ஏற்றி வந்தது தெரிந்தது.

அதை தொடர்ந்து பறிமுதல் செய்த பொருட்களை சரக்கு வாகனத்துடன் ராமநாதபுரத்தை சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டதுடன் சரக்கு வாகனம் மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களுடன் ராமநாதபுரம் சுங்கத்துறையினரிடம் மரைன் பொலிஸார் ஒப்படைத்தனர்.(நி)

# நீரில் மூழ்கி ரஷ்ய பிரஜை பலி

(கொழும்பு)

ஹுங்கம - கஹந்தமோதர, முகத்துவாரம் பகுதியில் ரஷ்ய பிரஜை ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக ஹுங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹந்தமோதர முகத்துவாரத்திற்கு அருகிலுள்ள கடற்கரையில் பயணித்த மூன்று ரஷ்யர்களில் ஒருவர் முகத்துவாரத்தில் இறங்கிய பின்னர் நீரில் மூழ்கி உயிரிழந்ததாக விடுதி ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.


ரஷ்ய பிரஜையான செர்பினன் பெட்ஸி என்ற 44 வயதுடைய நபரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

# தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வரமுடியாது திறைசேரியின் செயலாளர் அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என திறைசேரியின் செயலாளர் மகிந்த சிறிவர்தன எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

தேர்தல் நடத்தப்படும் தினம், தேர்தலுக்கான நிதி மற்றும் வாக்குச்சீட்டு அச்சிடுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று கலந்துரையாடல் இடம் பெற்றது.



குறித்த கலந்துரையாடலில் பங்கேற்குமாறு திறைசேரியின் செயலாளர், அரச அச்ச அதிகாரி மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# 20 ஆண்டுகளின் பின் விமான கட்டணங்களில் திருத்தம்

(கொழும்பு)

விமானப் போக்குவரத்து சேவைக் கட்டணத்தை அதிகரிக்க துறைமுகங்கள், கடற்படை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த புதிய கட்டணங்கள் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் திருத்தப்பட்டுள்ளன.

இருபது ஆண்டுகளுக்குப் பின்னர் விமானக் கட்டண திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் தற்போது வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையின் வான் பரப்பை பயன்படுத்தும் வெளிநாட்டு விமானங்கள் மூலம் வருடாந்த வருமானத்தை ஒரு கோடியே இருபது இலட்சம் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 121



மலர்ந்தது. இவர்களுடைய பேச்சைக் கேட்டுத் தாங்கள் வாய் விட்டுச் சிரித்தீர்கள். அந்தக் குதூகலச் சிரிப்பின் ஒலியைக் கேட்டு உடைய பிராட்டியின் (பட்டத்து அரசியை 'உடைய பிராட்டி' என்று குறிப்பிடுவது அக்காலத்து மரபு) முகமும் தாதியரின் முகங்களும் மலர்ந்தன.

நானும் மகிழ்ந்தேன். இவ்வளவு குதூகலம் தங்களுக்கு அளிக்கக் கூடியவர்களை இத்தனை நாள் தங்கள் சந்நிதானத்துக்கு வரவொட்டாமல் தடுத்தது என்னுடைய பெரும் பிழைதானே?" என்றார்.

உடனே, சக்கரவர்த்தியின் பக்கம் திரும்பிப் பார்த்துக் கூறினார்:

"அரசர்க்கரசே! நான் செய்த பிழை இதுதான். இத்தனை காலமும் நான் இவர்களைப் போன்ற புலவர் சிகாமண்ணிகளைத் தங்களிடம் வரவொட்டாமல் தடை செய்து வைத்திருந்தேன். அரண்மனை மருத்துவர் சொற்படி செய்தேன்.

ஆனால் இப்போது அது பிழை என்று உணர்கிறேன். இந்தப் புலவர்களின் வரவினால் தங்கள் முகம் மலர்ந்தது. இவர்களுடைய பேச்சைக் கேட்டுத் தங்கள் முகம்

"நன்று சொன்னீர், தளபதி! இப்போதாவது இதை நீர் உணர்ந்தீர், அல்லவா? 'வைத்தியர் சொல்வதைக் கேட்க வேண்டாம் புலவர்கள் வருவதைத் தடுக்க வேண்டாம்' என்று உமக்கு நான் அடிக்கடி சொன்னதின் காரணம் தெரிகிறது அல்லவா?" என்றார் சக்கரவர்த்தி.

அரண்மனை வைத்தியர் எழுந்து கைகட்டி வாய் புதைத்து ஏதோ சொல்லத் தொடங்கினார். அதைச் சுந்தர சோழர் சட்டை செய்யாமல் புலவர்களைப் பார்த்து "இந்த அருமையான பாடலைப் பாடிய புலவர் யார் என்று உங்களில் யாருக்காவது தெரியுமா? தெரிந்தால் சொல்ல வேணும்!" என்றார்.

நல்லன் சாத்தனார், "அரசர்க்கரசே! அதுதான் தெரியவில்லை! நாங்களும் அதைக் கண்டுபிடிக்க முயன்று கொண்டுதானிருக்கிறோம். கண்டுபிடித்து அந்த மாபெரும் புலவருக்குக் 'கவிச் சக்கரவர்த்தி' என்று பட்டம் சூட்டவும் சிவிகையில் ஏற்றி அவரை நாங்கள் சுமந்து செல்லவும் சித்தமாயிருக்கிறோம். இதுகாறும் எங்கள் முயற்சி பலன் அளிக்கவில்லை" என்று சொன்னார்.

"அதில் வியப்பு ஒன்றுமில்லை. நாலுவரி கொண்ட பாடலில் இவ்வளவு பெரும் பொய்களை அடக்கக் கூடிய மகாகவிஞர் தமது பெயரை வெளிப்படுத்திக் கொண்டு முன்வர விரும்பமாட்டார் தானே?" என்று மகாராஜா கூறியதும், புலவர்களின் திருமுகங்களைப் பார்க்க வேண்டுமே! ஒருவர் முகத்திலாவது ஈ ஆடவில்லை. என்ன மறுமொழி சொல்லுவது என்றும் அவர்களுக்குத் தெரியவில்லை.

இந்த நிலைமையில் நமது வந்தியத்தேவன் துணிச்சலாக எழுந்து, "பிரபு! அப்படி ஒரே அடியாகப் பொய் என்று தள்ளி விடக் கூடாது. இல்லாத விடயத்தைச் சாதாரண பாமர மக்கள் சொன்னால் அது பொய் இராஜாங்க நிர்வாகத்தில் ஈடுபட்டவர்கள் அவ்விதம் சொன்னால், அது இராஜதந்திர சாணக்கியம் கவிகள் அவ்வாறு கூறினால் அது கற்பனை, அணி அலங்காரம், இல்பொருள் உவமை" என்றான்.

புலவர்கள் அத்தனைபேரும் அவன் பக்கமாகப் பார்த்து "நன்று! நன்று!" என்று உற்சாகத்துடன் ஆர்ப்பரித்தார்கள்.

சக்கரவர்த்தியும் வந்தியத்தேவனை உற்று நோக்கி, "ஓ! நீ காஞ்சியிலிருந்து ஓலை கொண்டு வந்தவன் அல்லவா? கெட்டிக்காரப் பிள்ளை! நன்றாக என்னை மடக்கிவிட்டாய்!" என்றார். பிறகு சபையைப் பார்த்து, "புலவர்களே! பாடல் மிக அருமையான பாடலாக இருந்தாலும், அதைப் பாடியவரைக் கண்டுபிடிக்க வேண்டிய சிரமமும், அவருக்குக் கவிச் சக்கரவர்த்தி என்னும் பட்டம் சூட்டவேண்டிய அவசியமும் இல்லை.

இதைப் பாடிய புலவரை எனக்குத் தெரியும். ஏற்கனவே அவருடைய சிரஸின் பேரில் தூக்க முடியாத கனமுடைய சோழ சாம்ராஜ்ய மணிமகுடம் உட்கார்ந்து அழுத்திக் கொண்டிருக்கிறது.

(தொடரும்...)


# சிறுவர் அரங்கம்

## பெரிய சோம்பறி யார்?

(நேற்றைய தொடர்ச்சி...)

அந்த வாழ்க்கை அவனுக்குப் பிடித்து இருக்கிறதா? என்று கேட்டான் அரசன்.

அவனிடம் நீண்ட நேரம் பேசினேன். அவன் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகக் கூறினான். தன் மூக்கிலோ அல்லது வாயிலோ பழமரம் முளைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். பழத்திற்காக நான் வாயைத் திறந்து கொண்டு படுத்திருக்க வேண்டாமே என்றான் அவன், என்று விளக்கமாகச் சொன்னான் அமைச்சன். நான் கேட்டதிலேயே அற்புதமான சோம்பேறி இவன். என் மகளுக்கு ஏற்றவன், என்றான் அரசன்.



அரசன் ஐந்தாம் அமைச்சனைப் பார்த்தான்.

உடனே அந்த அமைச்சன், அரசே! நான் பார்த்த சோம்பேறியைப் பற்றிச் சொன்னால் உங்கள் கருத்தை மாற்றிக் கொள்வீர்கள். இவனுடைய சோம்பேறித் தனத் தி[illegible] மற்ற நால்வரும் [illegible] தூசி பெற மாட்டார்கள் என்றான். நீ பார்த்த சோம்பேறியைப் பற்றிச் சொல் என்றான் அரசன்.

அரசே! சோம்பேறியைத் தேடும் முயற்சியில் நான் பலமுறை உயிர் பிழைத்தேன். ஒரு நாட்டை அடைந்தேன். [illegible] மகா சோம்பேறி ஒருவனைக் கண்டேன் என்றான் அவன்.

ஆர்வத்தை அடக்க முடியாத அரசன், அவன் என்ன செய்தான்? என்று பரபரப்புடன் கேட்டான். சிலர் அவன் உயிரோடு இருப்பதாகச் சொன்னார்கள். சிலர் அவன் இறந்து விட்டதாகச் சொன்னார்கள். சிலர் அவனைத் துறவி என்றார்கள். சிலர் அவனைப் பற்றிக் கருத்து சொல்ல மறுத்தார்கள். நானே சென்று அவனை நேரில் பார்த்தேன். அவனைச் சுற்றிலும் புற்று வளர்ந்து இருந்தது. எழுபது ஆண்டுகளாக அவன் சிறிதுகூட அசையவில்லை.

யார் பேச்சையும் கேட்க விரும்பாத அவன் காதுகளில் மெழுகை அடைத்துக் கொண்டான். பேச வேண்டி வரும் என்பதால் தன் நாக்கை ஒரு பாறாங்கல்லில் கட்டி இருந்தான். எதையும் அவன் சாப்பிடுவது இல்லை. காற்றை மட்டும் சுவாசித்துக் கொண்டு உயிர் வாழ்கிறான். யாராவது உணவைக் கொண்டு வந்தால் கூட அதைக் கையில் வாங்க அவனுக்குச் சோம்பல். பத்தாண்டுகளுக்கு முன் அவன் தன் உதடுகளைச் சிறிது அசைத்தானாம் அதனால்தான் அவன் உயிரோடு இருப்பது மற்றவர்க்குத் தெரிந்ததாம், என்று நடந்ததைச் சொன்னான் அந்த அமைச்சன்.

வியப்பு அடைந்த அரசன், இப்படி ஒரு சோம்பேறியா? அவனே என் மருமகன். அவனுக்கும் இளவரசிக்கும் விரைவில் திருமணத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று மகிழ்ச்சியுடன் சொன்னான். ஒரு நல்ல நாளில் அந்தச் சோம்பேறிக்கும் இளவரசிக்கும் திருமணம் நடந்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மால் நேற்றை சரிசெய்ய முடியாது.
ஆனால் நாளையை உருவாக்க முடியும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## போக்குவரத்து நெருக்கடி தீர்க்கப்படாவிட்டால்...

யாழ்ப்பாண நகரிலும் அதனை அண்மித்த பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடி என்பது சொல்லிமாளா.

அந்தளவுக்கு விலத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதிலும் பாடசாலை நிறைவடைந்து மாணவர்கள் வெளியேறும்போது, யாழ்.நகர வீதிகள் முழுவதும் திக்குமுக்காடுவதை அவதானிக்க முடியும்.

இந்த நிலைமைக்குக் காரணம் வாகனங்களின் அதீத அதிகரிப்பு என்பது புரிதற்குரியது.

அதாவது ஒரு வீட்டில் வளர்ந்தவர்கள் ஐந்து பேர் இருந்தால், அந்த வீட்டில் குறைந்தது ஐந்து மோட்டார் சைக்கிள் பயன்பாட்டில் இருப்பதைக் காணலாம்.

இதுதவிர, கொழும்பில் இருந்து வருகின்ற வாகனங்கள் அனைத்தும் யாழ்ப்பாண நகரை நோக்கியே வருகின்றன.

அதிலும் குறிப்பாக கனரக வாகனங்கள் நேரவரையறையின்றி, யாழ்.நகருக்குள் நுழைவது மிக மோசமான போக்குவரத்து நெருக்கடியை ஏற்படுத்துகிறது.

அதேவேளை யாழ்.நகர வீதிகளின் இரு மருங்கிலும் மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள், வாகனங்கள் தரித்து நின்று குறித்த வீதியை ஆக்கிரமித்துக் கொள்ள அந்தப் பகுதி முழுவதும் வாகன நெரிசலுக்கு உட்படுகின்றது.

இதற்கும் மேலாக, கையடக்கத் தொலைபேசியில் உரையாடியபடி வாகனங்களைச் செலுத்துகின்றமை கண்டபாட்டில் அதிகரித்து விட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், யாழ்ப்பாணத்தில் மறைந்து நின்று வாகனங்களைச் சோதிக்கின்ற கடமையை மட்டுமே போக்குவரத்துப் பொலிஸார் செய்வர் என்பது போன்ற சூழ்நிலையும் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகின்றது.

அதாவது போக்குவரத்து நெரிசல் இருக்கும்போது, குறித்த சந்திகளில் பொலிஸார் சேவையில் ஈடுபட்டு வாகனங்களை ஒழுங்குபடுத்துவது அவர்களின் கடமையாகும்.

இருந்தும் அவ்வாறு பொலிஸார் கடமையில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

நிலைமை இதுவாக இருக்கும்போது, வாகன விபத்துக்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதுடன் அவ்வாறான சம்பவங்கள் ஏற்படும் பட்சத்தில், அதனால் பாரிய இழப்புகளைச் சந்திக்க நேரிடும்.

ஆகவே யாழ்ப்பாணம் உள்ளிட்ட போக்குவரத்து நெருக்கடி மிகுந்த இடங்களில் பொலிஸார் பணியில் ஈடுபடுத்தப்படுவதுடன் வீதி ஓரங்களில் வாகனங்கள் நிறுத்துவதை முற்றாகத் தடுத்தல் – கனரக வாகனங்களின் நடமாட்டத்துக்கான நேரவரையறைகளை கடுமையாக அமுல்படுத்தல், கண்காணிப்புக் கமராக்கள் மூலம் வாகனங்களையும் சாரதிகளையும் கண்காணித்தல் என்ற செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்தி அதன்மூலம் போக்குவரத்து நெருக்கடிகளை முற்றாகத் தடுக்க வேண்டும். இல்லையேல் நிலைமை படுமோசமாகும்.

# இந்த மாதம் ஐ.எம்.எப் உதவி கிடைக்கும் குழப்புவோருக்கு எதிராக நடவடிக்கை

## பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில்

இந்த மாதத்தின் 3 அல்லது 4 ஆவது வாரத்தில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 2.9 பில்லியன் டொலர் நிதி கிடைக்கப் பெறும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதாரம் மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் தொடர்பில் பாராளுமன்றில் நேற்று நிகழ்த்திய விசேட உரையில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீனாவின் கடன்மறுசீரமைக்கான எழுத்துமூல உத்தரவாதம் நேற்றிரவு (நேற்று முன்தினம்) தமக்கு கிடைக்கப் பெற்றதாகவும், அது தொடர்பில், மத்திய வங்கியின் ஆளுநருடன் கலந்துரையாடி அதனை சர்வதேச நாணயநிதியத்துக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவதற்கு கடந்த ஆண்டு மார்ச் மாதம் தீர்மானிக்கப்பட்டது.

இதனடிப் படையில், அனைத்து இரு தரப்பு கடன் வழங்குநர்களும் நிதியியல் உறுதிப்பாடுகளை வழங்கியுள்ளனர் என்றும் இதற்கமைய, இந்த மாதத்தின் 3 அல்லது 4 ஆவது வாரத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்கப் பெறும் என நம்புவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாடு பெற்றுக்கொண்ட இருதரப்பு கடன்கள் தற்போது செலுத்தப்படுவதில்லை. பலதரப்பு மற்றும் வணிகக்கடன்கள் மாத்திரமே மீளச் செலுத்தப்படுகின்றன.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் முறியுமாயின், வெளிநாடு மற்றும் தனியார் வங்கிகளில் பெற்ற கடனை செலுத்த வேண்டி ஏற்படும்.

அது கடந்த 7 முதல் 8 மாதங்களுக்கு முன்னர் எதிர்கொண்ட நிலைமையை விட கடினமானதாக அமையும்.

வரிச்சுமை அதிகரித்துள்ளதாக தொழில் வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். எனினும், குறுகிய காலத்துக்கு இதனை தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கும்.

இந்த நிலைமையை, மக்களும், தொழிற்சங்கங்களும் புரிந்துகொள்ள வேண்டும்.

இதனைப் புறக்கணித்தால் தற்போதையதை விட நிலைமை மிகவும் மோசமாகும்.

கருத்து சுதந்திரத்துக்கு மதிப்பளிப்பதுடன் அமைதியான ஆர்ப்பாட்டங்களுக்கும் இடமளிக்கப்படும்.

அதனை விடுத்து, ஆர்ப்பாட்டங்கள் பேரணிகள் மூலம் இந்த நடவடிக்கையை குழப்ப நினைப்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது உரையின் போது எச்சரித்தார். (ம-7)

# செவித்திறன் குறைவானோருக்கும் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் லசந்த

நாடுமுழுவதும் உள்ள செவித்திறன் குறைபாடுள்ள சமூகத்தினருக்கான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் வேலைத் திட்டம் இந்தவாரம் முதல் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார். நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய இராஜாங்க அமைச்சர், செவித்திறன் குறைபாடுள்ள 50 பேருக்குசாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் முன்னோடித்திட்டம் இந்தவாரம் வெற்றிகரமாக நிறைவடைந்ததாகசுட்டிக்காட்டினார். "அந்த 50 பேரும் மிகவும் வெற்றிகரமாக வாகனங்களை ஓட்டினார்கள். விபத்துகள் ஏதும் ஏற்படவில்லை" என்றார்.

அதன்படி, இந்தவாரம் முதல் நாடு முழுவதும் இந்த வேலைத் திட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கால்களை இழந்த இராணுவச் சிப்பாய்கள் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மருத்துவ அறிக்கையைப் பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது அந்தகால அவகாசம் 4 ஆண்டுகள் - 8 ஆண்டுகள் வரை நீடிக்கப்பட்டுள்ளதாகவும் அழகியவன்ன தெரிவித்தார். (ம-7)

# ஆனைக்கோட்டையில் விபத்து மாணவன் காயம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை - கூழாவடி பகுதியில் அரச பேருந்து மீது மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் மாணவன் ஒருவர் காயமடைந்துள்ளார்.

குறித்த மாணவனும் அவரது தாயும் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை அவ்வழியே சென்ற காரைநகர் - கண்டி போக்குவரத்து அரச பேருந்தின் பின் பக்கமாக மோதி இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்தில் சம்பந்தப்பட்ட பேருந்தினை பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

# சங்கடஹர சதுர்த்தி

யாழ் வண். வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் சங்கடஹர சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 11.3.2023 சனிக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார் என பிரதமகுரு சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறியதருகிறார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** கல்வயல் குகன் அரைக்கும் ஆலை சந்தி, கல்வயல் மானாவளை , கல்வயல் சிவன் கோவில் வீதி சந்திரபுரம், கனகம்புளியடி சந்தி, மட்டுவில் வீரகேணி சந்தி-நுணாவில் பருத்தித்துறை வீதி,முத்துமாரி அம்மன் கோவில் மட்டுவில் வடக்கு, புத்தூர் வீதி மட்டுவில் இராணுவ முகாம்,சரசாலை வடக்கு, வேம்பிராய் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் [illegible]றம்பைக்குளம், சிதம்பரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைபபடும்.

# தொலைபேசி மூலம் ஏமாற்றி பண மோசடி செய்தவர்

## பொலிஸாரால் கைது

அதிஷ்டம், பரிசுப்பொருள் உங்களுக்கு கிடைத்துள்ளது என தொலைபேசிமூலம் அழைத்து மக்களை ஏமாற்றி லட்சக்கணக்கில் பணமோசடி செய்து ஏமாற்றிய பண்டாரகம அட்டுளுகம, பிரதேசத்தை சேர்ந்த நபர் ஒருவரை யாழ் விசேட குற்றவிசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான குழுவினரால் நேற்று கைது செய்யப்பட்டார்.

யாழ்.மாவட்டத்தை சேர்ந்த நபர் ஒருவருக்கு அதிஷ்ட கார் ஒன்று கிடைத்துள்ளதாக Ez Case மூலம் 24 லட்சம் ரூபா மோசடி செய்து கையடக்க தொலைபேசி மூலம் உரையாடி பெற்றமை, தொடர்பாக கிடைத்த முறைப்பாட்டின்படி விசாரணைகளை மேற்கொண்டு குறித்த நபரை கைது செய்துள்ளனர்.

இப்படியாக பெரிய மற்றும் சிறிய தொகைகளில் ஏராளமானவர்கள் வட பகுதியில் ஏமாற்றப்பட்டுள்ளமை தெரியவருகிறது.

இவ்வாறான மோசடிக் கும்பலிடம் அகப்பட்டு ஏமாறாமல் விழிப்புடன் இருக்குமாறும், அவ்வாறான தொடர்புகள் கிடைக்கும் போது சாதுரியமாக செயற்பட்டு உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தெரிவிப்பது இவ்வாறான குற்றச் செயல்களில் மேலும் ஈடுபடுபவர்களை இனம் காண உதவும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துடனான சேவையை விஸ்தரிக்க ஆர்வம் காட்டும் சர்வதேச விமான நிலையங்கள்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சர்வதேச விமான நிலையம் செயற்பட தொடங்கியதன் பின்னர், தற்போது பல சர்வதேச விமான நிலையங்கள் தமது சேவையினை யாழ்ப்பாணத்துடன் விஸ்தரிப்பதில் ஆர்வம் காட்டுகின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணத்துடன் சேவைகளை மேற்கொள்ள புதிய இந்திய விமான நிறுவனங்கள் ஆர்வம் கொண்டுள்ளதாக இந்திய துணை உயர்ஸ்தானிகர் ராகேஷ் நட்ராஜ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண வர்த்தக மற்றும் தொழில்துறை சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் கண்காட்சியின் இறுதி நாளன்று அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போது இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் சென்னைக்கு இடையே வாராந்தம் நான்கு விமான சேவைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்த அவர், முழு அளவிலான பயணிகள் பயணம் செய்வதாகவும் குறிப்பிட்டார்.

பெங்களூர் போன்ற ஏனைய இடங்களுடனான சேவையினை விஸ்தரிப்பதில் தாம் ஈடுபாட்டை கொண்டுள்ளதாகவும் வர்த்தக சரக்கு சேவைகளையும் ஆரம்பிக்க இந்திய வர்த்தக சமூகம் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டால், வட மாகாண மக்கள் தமது உற்பத்தி பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என தெரிவித்தார். (நி)

# காலவரையறையின்றி மூடப்பட்ட சப்ரகமுவ பல்கலையின் கல்வி நடவடிக்கைகள் மீள ஆரம்பம்

(கொழும்பு)


காலவரையறை இன்றி மூடப்பட்ட சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் நேற்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முகாமைத்துவ பீட முதலாம் ஆண்டு மாணவர்களுக்கும் மற்றுமொரு மாணவர் குழுவுக்கும் கடந்த 16 ஆம் திகதி ஏற்பட்ட மோதலை அடுத்து சப்ரகமுவ பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது.

எனினும், பிரயோக விஞ்ஞான பீடத்தின் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ள தினம் உள்ளிட்ட விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும் என சப்ரகமுவ பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது. (நி)

# மீனவர்களை தாக்கி

## 1000 கிலோ மீன்கள் கொள்ளை




(கொழும்பு)

வெலிகம, பத்தேவத்த மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற மீனவர்கள்மீது 20 பேர் கொண்ட கடற்கொள்ளையர்கள் தாக்குதல் நடத்தியதுடன், மிரிஸ்ஸ கடலில் வைத்து அவர்களது 1,000 கிலோ மீன்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக வெலிகம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இரண்டு படகுகளில் வந்த கடற்கொள்ளையர் குழுவொன்றே' கடற்கரையிலிருந்து கடலின் சுமார் 6 மைல் தொலைவில் வைத்து மீன்களை கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் வெலிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

### திருடப்பட்ட முச்சக்கர வண்டிகளுடன் ஐவர் கைது

(கொழும்பு)

முச்சக்கரவண்டி திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரலஸ்கமுவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற முச்சக்கர வண்டி திருட்டு தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இவர்கள் நேறறு முன்தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட 3 முச்சக்கர வண்டிகளுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 23 மற்றும் 32 வயதுடைய தெஹி வளை, நாவலப்பிட்டி, ரொசெல்ல, ஹற்றன், கொட்டகலை ஆகிய இடங்களை வசிப்பிடமாகக் கொண்டவர்கள்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொரலஸ்கமுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# பீரிஸின் பதவி நீக்கம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## பேராசிரியர் சன்ன ஜயசுமன



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவர் பதவியிலிருந்து பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் பதவி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,

கட்சியின் தலைவர் பதவியில் இருந்து ஜீ.எல்.பீரிஸ் நீக்கப்படுவார் என்பது வேடிக்கையானது. கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படும் சாகர காரியவசம் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார். (நி)

# சர்வதேச மகளிர் தினம் மார்ச்- 08

எங்கு சென்றாலும்
இந்த நாணயத்தைதான்
எடுத்துச் செல்ல பணிக்கிறீர்கள்..

பெண்ணாய்ச் சுமந்ததையும்
சம்பிரதாயங்களையும் அடையாளங்களையும்
மகளுக்கும் கற்றுக் கொடுக்க கட்டளையிடுகிறீர்கள்..

பழைய பஞ்சாங்கம்
உள்ளமெங்கும் உளுத்து உதிர
தப்பிக்க வழியின்றி
தலைதெறிக்க ஓடுகின்றேன்..
என் பாதம் படும் இடமெல்லாம்
பாலையாகவே விரிந்து எரிக்கிறது..

தசாப்தங்களாக நீளும் வாழ்வில்
தினந்தோறும் தீக்குளிக்கும்
பேதமையில் கனல்கிறது தேகம்..

கண்திறக்காத குஞ்சுப்பறவையின்
சிறகுகளை எறும்புகள் அரிப்பது போல
பிறப்பிலிருந்தே அரிக்கும்
சமூகத்தின் கோரப்பற்களை
பிடிங்கி எறிய முடியாத மனதை
சுமந்த உடல் எடை கூடிக் கனக்கிறது..

மரபுகளைத் துறக்கும் நேரம்
எனக்கும் சிறகுகள் முளைக்கும்..
என்னை முற்றிலும் என் உடலிலிருந்து
விடுவித்து உடல் பெயர்கின்றேன்..

அந்திப்பொழுதில்
கூடு திரும்பும் பறவைக் கூட்டங்களுக்கு
எதிர்த் திசையில் பறக்கும்
பறவை ஒன்றைக் கண்டால்
என் பெயர் சொல்லி அழையுங்கள்..
நீங்களும் இணையுங்கள்..

சங்கரி சிவகணேசன்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 240 | 250 | 280 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 140 | 140 |
| பச்சைமிளகாய் | 350 | 320 | 350 | 300 |
| தக்காளி | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 140 | 180 | 200 | 240 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 200 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 160 | 150 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 130 | 140 |
| பாகற்காய் | 450 | 400 | 400 | 600 |
| வெண்டக்காய் | 300 | 280 | 250 | 350 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 250 | 300 | 250 | 300 |
| லீக்ஸ் | 300 | 250 | 250 | 300 |
| பீற்றூட் | 220 | 200 | 180 | 240 |
| கறிமிளகாய் | 350 | 500 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 1500 | 1600 | 1400 | 2000 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 320 |
| கத்தரிதம்புள்ள | 220 | 200 | 200 | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 150 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 120 | 240 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 130 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 25 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டிறைச்சி...

கைச் சேர்ந்த லோகேந்திரகுமார் மேரி ஜெனிஸ்ரா (வயது- 46) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு நேற்று முன்தினம் திங்கட்கிழமை உயிரிழந்துள்ளார்.

"கடந்த 25ஆம் திகதி அவர் ஆட்டிறைச்சி சாப்பிட்டுள்ளார். ஆட்டிறைச்சி எலும்பு தொண்டைக்குள் சிக்கியுள்ளது. அதனால் அவர் வாழைப்பழம் சாப்பிட்டுள்ளார். எனினும் எலும்பு மார்பு பகுதி வரை இறங்கி சிக்கிக் கொண்டது.

மறுநாள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார். அவரது வாய் ஊடாக கமரா செலுத்தி ஆராய மருத்துவர்கள் முற்பட்டுள்ளனர். எனினும் அதற்கு அனுமதிக்காது குடும்பப் பெண் வீடு திரும்பியுள்ளார்.

இந்நிலையில் குறித்த பெண் நேற்று முன்தினம் குருதி வாந்தி எடுத்ததையடுத்து உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

கமரா மூலம் பார்த்தபோது ஆட்டிறைச்சி எலும்பு குருதிக் குழாயில் குத்தியதாலேயே குருதி வாந்தி ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது" என்று விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் நேற்று மேற்கொண்டார். (ம-7,33,60,104)

## ஏப்ரல் 25...

அதன்படி, இது தொடர்பான அறிவிப்பை வெளியிட மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு உத்தரவிட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல், அதற்கான நிதி மற்றும் வாக்குச்சீட்டு அச்சிடுதல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று செவ்வாய்க்கிழமை கூடியது.

இதன்போது திறைசேரி செயலாளர், அரச அதிகாரி மற்றும் பொலிஸ் மா அதிபர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் திறைசேரி செயலாளர் அதில் கலந்துகொள்ளவில்லை.

இம்மாதம் 9ஆம் திகதி தேர்தலை நடத்த முன்னதாக திட்டமிடப்பட்டிருந்தபோதும் நிதி உள்ளிட்ட பிரச்சினைகள் காரணமாக தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. (ம-7)

## ஜனநாயகத்தை...

கடுமையாக முயற்சித்து வருகிறது.

இது ஜனநாயகத்தை நசுக்கும் விடயமாகும். ஜனநாயகத்தை பாதுகாக்க உடனடியாக தேர்தலை நடத்துங்கள் என சஜித் சுட்டிக்காட்டினார். (ம-7)

## இளம் குடும்பஸ்...

ராஜா ஜெகபாலன் (வயது-41) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## விபரீத முடிவெடு...

பெற்றுள்ளது.

இதில் அதேபகுதியைச் சேர்ந்த முருகையா கணேசலிங்கம் (வயது-65) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## ஒரே குடும்பத்...

வவுனியா, குட்செட் வீதி உள்ளக வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேரின் சடலங்கள் பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றைய தினம் குறித்த வீட்டின் உரிமையாளருக்கு அவரது நண்பர் ஒருவர் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்தியுள்ளார்.

எனினும் அவர் பதிலளிக்காததை அடுத்து அவரது வீட்டிற்கு சென்றுள்ளார்.

இதன்போது குறித்த வீட்டினுள் குடும்பஸ்தர் அவரது சிறுவயதான இரு பிள்ளைகள், மனைவி ஆகியோர் மர்மமான முறையில் உயிரிழந்திருந்தமையை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குறித்த சம்பவத்தில் அதேபகுதியை சேர்ந்த 42 வயதான சிவபாத சுந்தரம் கௌசிகன் வீட்டின் விறாந்தை பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டதுடன், ஆசிரியையான அவரது மனைவி கௌ. வரதராயினி (வயது-36), இருபிள்ளைகளான கௌ.மைத்ரா (வயது-9), கௌ. கேசரா (வயது-3) ஆகியோர் உறங்கிய படியும் சடலமாக மீட்கப்பட்டனர்.

உயிரிழந்த தந்தை ஒன்லைன் முறையின் ஊடாக விசா செய்பவர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவரும் வவுனியா பொலிஸார் மீட்கப்பட்ட சடலங்களை சட்டவைத்திய பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,299)

## தேர்தல் நடத்தப்...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறும் ஜனாதிபதி இதன்போது எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கு மிகவும் கடினமான பல பொருளாதார நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளதாகவும், தற்போது பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும், இதனால் சமூகத்தில் உள்ள அனைவருக்கும் ஏற்படும் கஷ்டங்கள் தொடரும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## வடம...

ப்பது கண்டறியப்பட்டுள்ளதுடன் நேற்று செவ்வாய்க்கிழமை வரை ஏழு மாடுகள் உயிரிழந்திருப்பதாக அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொருளாளரும் மருதங்கேணி கால்நடை வைத்தியசாலை வைத்தியருமான எஸ்.சுகிர்தன் தெரிவித்தார்.

தாக்கத்திற்குள்ளான மாடுகள் மிகவும் சோர்வான நிலையில் அவதானிக்க முடிந்ததுடன் நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் மெலிந்த நிலையில் காணப்பட்டது. பெரியம்மையினால் பாதிக்கப்பட்ட நிலையில் போதிய ஊட்டமின்மையே இதற்கு காரணம் எனவும், குறித்த நோயின் தாக்கம் இரண்டாம் கட்டத் தாக்கத்திற்கு உள்ளாகாத வண்ணம் தடுப்பூசிகளை ஏற்றுவதன் மூலம் தடுக்க முடியும் என வைத்தியர் தெரிவித்தார். (ம-7,33,60)

## அரசின் வரிக்...

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், அரச வைத்திய அரிகாரிகள் சங்கம் உள்ளிட்ட 40 தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் நேற்றைய சந்திப்பில் கலந்து கொண்டனர். (ம-7)

## அல்வாயில்...

தொலைபேசி, 29 ஆயிரம் ரூபாய் பணம் என்பன திருடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

அல்வாய் கிழக்குப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்தவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை வீட்டை திறந்து குளியலறைக்கு சென்றுவிட்டு தமது அன்றாட கடமைகளுக்கு சென்றுவிட்டனர்.

அதன் பின்னர் பார்த்தபோது அறைகள் திறக்கப்பட்டு ஒன்றரைப் பவுண் சங்கிலி, முக்கால் பவுண் கைச்செயின், பெறுமதியான தொலைபேசி, 29 ஆயிரம் ரூபாய் பணம் என்பன திருடப்பட்டமை தெரியவந்துள்ளது. (ம-7,60)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 07/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1507
வெற்றி இலக்கங்கள்
மீனம் 2 3 2 4 8 4

தன நிதானய
திகதி - 2023.03.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1082
H 09 32 47 60

கொவிசெத
திகதி 2023.03.07
சீட்டிழுப்பு இலக்கம் 3294
T 02 26 53 80

மெகா பவர்
திகதி 07/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1400
G 12 25 42 60 73

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.03.07
சீட்டிழுப்பு இலக்கம் 361
மேஷம் 03 36 47 55 மேஷம்

மஹஜன சம்பத
திகதி 2023/03/07
சீட்டிழுப்பு இலக்கம் 5052
T 9 5 4 9 4 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2027
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.03.07
தினம் செவ்வாய்க்கிழமை
E 45 61 70 73
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,009,960/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.07
சீட்டிழுப்பு இல : 4188
வர்ணம் : பச்சை
ரூ. 4,400,580/-
18 43 59 74 U

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 297
சீட்டிழுப்பு திகதி 2023.03.07
செவ்வாய்க்கிழமை
16 22 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,899,860/-

ராசி
ரூ. 2,303,950/-
05 14 18 46
திகதி 2023-03-07
வெற்றி வாரம் 3739
வர்ணம் சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,682,130/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 22 18 35 50 63
சீட்டிழுப்பு வாரம் 1203
இளம் சிவப்பு
2023.03.07 செவ்வாய்க்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 311,439,944.20

அத கோடிபதி
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1853
சீட்டிழுப்பு திகதி : 2023.03.07
ரூ. 4,798,620/-
15 30 40 47 I


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# IELTS

DMI COMPUTER EDUCATION
0777 17 35 17

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 17)

Academic or General

**IELTS Life Skills - A1**
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன்
அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
**DIPLOMA IN ENGLISH**
புதிய பிரிவு ஆரம்பம்
11/3/2023
SAT 9 am
3 pm

**SPOKEN ENGLISH** நேரடி வகுப்புக்களாக

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-6113)

**DMI COMPUTER EDUCATION**
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6119)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6119)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



## நீர் இறைக்கும் இயந்திரம் தேவை

நல்ல நிலையில் உள்ள வில்லியஸ் அல்லது ரோபின் வகை இயந்திரம் தேவை.

தொடர்புகளுக்கு (14829)

**077 689 4344**



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14825)

**076 825 7716** (ஆகாஸ்)



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 87 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 km
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 m தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14824)

**074 318 7263**
**076 755 8606**
**076 436 5814**



## யாழ். அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோயில் (அத்தியடி பிள்ளையார் கோயில்)

### பணியாளர் உடன் தேவை

எமது ஆலயத்திற்கு சைவ ஆசார சீலமிக்க ஆண் பணியாளர் தேவை. கோயில் காரியாலய, மற்றும் கோயில் வேலைகளை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும். வேதனம் நேரில் பேசிக்கொள்ளலாம். (14827)

| தலைவர் | பொருளாளர் | செயலாளர் |
|---|---|---|
| 077 181 5868 | 077 710 4505 | 077 244 4172 |



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 076 097 3127


## மரண அறிவித்தல்

தோற்றம்
10 – 02 – 1934



மறைவு
07 – 03 – 2023

### புஸ்பலீலா பத்மநாதன் (ஆச்சி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சிவன் வீதி உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட புஸ்பலீலா பத்மநாதன் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை (07.03.2023) இறைபதமடைந்தார்.

அன்னார் தம்பையா - சோதிப்பிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் வேலாயுதம் - கனகம்மா தம்பதியினரின் அருமை மருமகளும் பத்மநாதனின் (கிச்சி) பாசமிகு மனைவியும் அமரர் தில்லைநடராசா, அமரர் புஸ்பநாதன், மாலதி (ஜேர்மனி) அமரர் வசந்தி, தவபாலன் (நோர்வே), தர்மபாலன் (லண்டன்), தயாளன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சரோஜினிதேவி, சித்திரா (ஜேர்மனி) குணரட்ணம் (ஜேர்மனி), புஸ்பலதா (நோர்வே), குமுதினி (லண்டன்) ஜெயந்தி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்வமணி, அமரர் ஞானமணி, அமரர் செல்லத்துரை, பொன்னம்பலம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுனித்திரா, சுபாஜினி, சுதர்சினி, உஷா, ஜீவிதா, அமரர் ஜீவானந்த், தாரணி, தரண்யா, சுவன்யா, பிரவீன், நவீன், பிரணவி, சாருஜன், தாருஜன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 08.03.2023 புதன்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : ப.தயாளன்(மகன்)
சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

077 990 7163

(14820)


## NORTH LANKA IIT CITY CAMPUS

**APPROVED BY UGC AND UNESCO**

பட்டச்சான்றிதழ்கள்

பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்களுக்கான ஓர் அரிய சந்தர்ப்பம்

**நீங்களும் ஓர் கணினிப் பட்டதாரி ஆகலாம்**

**B.Sc in Computer Science**
தகமை: A/L 3 Passes
காலம்: 3Years

**B.Sc in Computer Science [Top-Up]**
தகமை: HND in Computer Science
காலம்: 1Year

**M.Sc in Computer Science**
தகமை: Degree in Computer Science
காலம்: 1Year

**விசேட சலுகைக் கட்டணங்களுடன்**

North Lanka IIT
Top Floor,
People's Bank Building ,
Stanley Road, Jaffna
T.P:0767504535



(C-6118)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.